தங்க நகைகள்

சிறந்தவை

KR

சீல்

கே. ஆர் & சன்ஸ்

பெரியகடை வீதி, கோயமுத்தூர்

மார்க்கெட் விலையில் 10 சத விதம் முதல் 20 வரை குறைக்கப்பட்டு சகல ரகங்களில் கைத்தறி துணிகள் எங்கள் விற்பனை கடைகளில் கிடைக்கும். இதற்குக் காரணம், சரக்குகள் இடை வியாபாரிகள் லாபமில்லாமல், நேராக தறியிலிருந்து உங்களுக்கு கருர் விலைகளில் விற்பதால்தான்.

சரக்குகள் புதியது. ஒவ்வொருவருடைய ஆசைக்கும் விருப்பத்துக்கும் தகுந்தபடி விதவிதமான பாட்டர்ன், டிசைன்கள். சாயம் வெளுக்காதது, உறுதியாக நெசவு செய்யப்பட்டு கண்ணை பறிக்கும்படி யிருப்பவைகள்.

நீடிந்து நிற்கவும் அன்ருட உபயோகத்துக்கும் கைத்தறி வேஷ்டி நிகரற்றது என்பதை ஞாபகபடுத்திக் கொள்ளவும்.

கைத்தறியிலிருந்து நேராக உங்களுக்குத்தான் வேஷ்டிகள் புடவைகள் சட்டைகள் டவல்கள் பிரின்ட்ஸ் சிங்கம்ஸ் சின்ட்ஸ் வீடு அலங்கரிக்கத் துணிகள் மேஜை துணிகள் படுக்கை விரிப்புகள் கைக்குட்டைகள் லுங்கிகள் அங்கவஸ்திரங்கள் கொசுவலைகள் க்வில்ட்ஸ் தலையணிகள்

மதராஸ் கோவாபரேடிவ் கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரொவின்ஷியல் கொவாபரேடிவ் ஸொஸைடி லிட்., 21, சுங்குராம செட்டி தெரு, ஜி.டி., மதராஸ்

பாசரசு

15

9 MAR 1946
MADRAS

பதிப்பாசிரியர்கள்

எம்.எஸ்.பாசு

ஸ்ரீமதி சாருவதி பாசு

சென்னை-600 008
208472

பாசரசு பெரம்பூர் சென்னை

BASARAS PERAMBUR MADRAS



இந்த இதழில்

	பக்கம்
க. நா. சு. — "சுபா"	5
பசி — "மயிலன்"	7
வீடு பார்த்தல் — கே. ஸ்ரீ.	8
முதல் காதல் — விசாலம் இராமசாமி	21
தண்டல் — பொ. சுந்தரமூர்த்தி நாயனர்	31
எஜமானி — எஸ். அலமேலு	36
முதல் குயவன் — "ஸ்ரீரா"	43
பாழ் மனை — ரா. ஸ்ரீநிவாசன்	49
குழந்தைகள் — "பாசரசு"	56

அணா 12

எல்லா உரிமைகளும்
பதிப்பாசிரியர்களுக்கே

கட்டுரைகளில் வெளியாகும் அபிப்
பிராயங்கள் பதிப்பாசிரியர்களின்
அபிப்பிராயங்களல்ல

298422

க. நா. சு.

"சுபா"

பசி, சர்மாவின் உயில் (நாவல்கள்)—அழகி, தெய்வ ஜனனம் (கதைத்தொகுதிகள்) — கவி ரவீந்திரநாத் டாகூர் (சரித்திரம்)— ஏழு நாடகங்கள், பொம்மையா மனைவியா, ஜீன் கிரிஸ்தொபர், சர்வதேசக் கதைகளில் நாலைந்து (மொழி பெயர்ப்புகள்)—இவைகளெல்லாம் புத்தக கேட்டலாக் அல்ல. இவ்வளவு புத்தகங்களையும் க. நா. சுப்ரமண்யம் எழுதினர்.

இவர் 1912-ல் பிறந்தவர். அண்ணமலை சர்வ கலா சாலையின் பி. ஏ. பட்டதாரி.

இவர் நிறைய புத்தகங்கள் எழுதியிருப்பது போலவே நிறைய பாஷைகளும் கற்றுக் கொண்டிருக்கிருர். இவருக்கு பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியன், ஸ்பானிஷ், முதலிய பாஷைகளில் எழுதப் படிக்க, மொழிபெயர்க்கத் தெரியும். இன்னும் குறைந்தது இருபது பாஷைகளாவது கற்றுக் கொள்ளப் பிரியப்படுகிருர்.

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"

என்று பாரதியார் சொன்னதை இவர் பூரணமாக ஆதரிக்கிருர்.

இவர் தமிழ் எழுத்தாளர்மட்டுமல்ல. ஆங்கில எழுத்தாளருங்கூடத்தான். இவர் 1929 முதல் 1935 வரையில் எவ்வளவோ கட்டுரைகள், கதைகள் எழுதியிருக்கிருர். இதுபோலவே இவருக்குத் தெரிந்த ஜெர்மன், இதாலியன், முதலிய பாஷைகளில் தமிழ்க்கதைகளை மொழிபெயர்த்தால், யுத்தத்தில் தோற்று விரசமடைந்துபோன அந்த தேசத்தார் இவைகளைப் படித்து உற்சாக மடையலாம்.

1939-ல் தமிழ் நாடெங்கும் சூறுவளி அடித்தது. அந்த சூறுவளி (பத்திரிகை) யின் ஆசிரியர் க. நா. சு. தான்.

சூறுவளிக்குப் பிறகு அமைதியான (சப்த நாடிகளும் ஒடுங்கிய) சந்திரோதயத்திற்கு 1945-ல் புத்துயிர் கொடுத்து தமிழ் நாடெங்கும் அப் பத்திரிகையை அமோகமாக வர வேற்கும்படியான நிலைமையில் கொண்டுவந்திருக்கிறுர் இதன் ஆசிரியர் க. நா. சு.

இவருக்கு அரசியலில் நம்பிக்கையில்லை. இவருக்கு காப்பியும் புத்தகங்களும்தான் ஜீவநாடி.

சென்னையில் உள்ள எழுத்தாளர்களையெல்லாம் ஒன்றுகூட்டி எழுத்தாள நண்பர்கள் கூட்டங்களை ஒழுங் காக நடத்தி பத்திரிகைத் தொழிலில் சீர்த்திருத்தங்களை செய்து வருகிறவரும் க. நா. சு. தான்.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள
வைரங்கள்
அழகிய வேலைப்பாடமைந்த
பவுன் நகைகள்
நவீன முறைகளால் தயாரிக்கப்படும்
வெள்ளி சாமான்கள்
இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்
உம்மிடியார்
உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி
24/25, சைனு பஜார் : : மதருஸ்

பசி

"மயிலன்"

(1) உலக உயிர்கள் அனைத்தும் உறுபசி
ஒன்றே யாயிடினும்
பலகலை கற்ற மனிதன் படும் பாடு
பன்னும் தரமாமோ!
(2) பறவை மிருகம் பயத்தினில் வாழ்வன
பாடு படுவதில்லை
அறிவு படைத்த மனிதன் உழைக்கினும்
அரைவ யிற்றுக்கில்லை.
(3) ஆறு மரக்கால் அரிசி உண்ணுகின்ற
ஆனைக் குணவுண்டு
ஏறு மனிதனோ நாழி அரிசிக்கே
என்செய்வேன் என்றேங்குறான்.
(4) உண்ணும் பொருள்கள் அனைத்தும் பொதுவென்
றுணர்ந்தன பிறஉயிர்கள்;
எண்ணும் மனிதன் இந்தப் பேருண்மை
ஏனோ அறியவில்லை!
(5) பிறந்த உயிர்கள் அனைத்தும் வாழ்ந்திடப்
பிறப்பு ரிமையுண்டு
சிறந்த அறிவுடை மனிதனுக் கிதனைச்
செப்புதல் விந்தையாமே!
(6) வயிறு வளர்ப்பவன்; ஏழை என்ற சொல்லை
வழங்கினர் உலகத்திலே
வயிற தொட்டியே வாடுவ தன்றி
வளர்ந்ததோ அங்குலமும்?
(7) உதய முதற்கதிர் அஸ்த மனம்வரை
உழைத்திடும் ஏழையேற்கு
இதயங் களிக்க உணவு கிடைத்திடல்
இல்லை என் அநியாயம்!
(8) உழைப்பைத் திருடுதல் உள்ள வரையிவ்
வுலகம் நன்றாமோ?
நிழலைப் பொருளெனக் கொள்ளும் மாந்தர்
நீதி அறிவாரோ?

வீடு பார்த்தல்

"கே. ஸ்ரீ"

(1)

ராமு: அடே, சீனுவா! வாப்பா பார்க்கணம்னு ரொம்ப நாளா...

சீனு: இல்லே...

ராமு: என்ன இல்லே? நான் உன்னைப்பார்க்கக் கூடாதா?

சீனு: நான் வந்து...

ராமு: நீ வந்ததுதான் வந்தூட்டே. கொஞ்சம் உட்கார்ந்தூட்டு போ. ராமுமாமாவோடே பேசினு என்ன அத்தனை கசப்பா...

சீனு: அப்படி எல்லாம் ஒன்னு மில்லே, மாமா,...

ராமு: ஆமாண்டா, பேசுவே! ஏன் பேசமாட்டே? முன்மாதிரி சீனுவா?

சீனு: என்ன, எனக்கே புரியவில்லையே? எனக்கே தெரியாமே, என் சுத்தளவு ஏதாவது...

ராமு: நான் அதைச் சொல்லலே. முன்மாதிரி நீ வீட்டுக்கு வந்து கலகலன்னு பேசறயா?

சீனு: எனக்கென்னமோ வீண்வம்புப் பேசியே பொழுதை போக்கறதுன்னு கொஞ்சங்கூட பிடிக்கற தில்லே.

ராமு: ஆமாம்—பிடிக்குமா? பிடிக்காதுதான். அப்போ எல்லாம் மாமா பேச ஆப்படுவாரான்னு அலேவே. இப்போ எல்லாம் வீட்டை விட்டு அசையறதே யில்லையே. ஊம், என் அசைவே?

சீனு: என்ன இப்படி கோவிச்சுக்கிறேளே?

ராமு: உன்னைச் சொல்லி என்னடா பிரயோஜனம்? நீ என் தலைகால் தெரியாமல் அலையமாட்டே?

சீனு: மாமா, சமாசாரம் எல்லாம் தெரியுமா?

ராமு: எல்லாம் தெரியும். உங்க அப்பாவை இந்த ஊரைவிட்டு மாத்தினது உனக்குத்தான் யோகம் அடிச்சுது.

சீனு: யோகமா? என் பாட்டை...

ராமு: பேஷ்! பாடக்கூடக் கத்துண்டூட்டயா?

சீனு: நான்படற பாட்டைச் சொல்லவந்தேன்.

ராமு: பாடு என்ன? ராஜாமாதிரி தனிக்குடித்தனம் வைக்கப்போறே.

சீனு: போதும், முடியில்லாத ராஜாதான்.

ராமு: ராணியிருக்காளேன்னு சந்தோஷப்படு; உன் மனைவி மங்களத்துக்கு என்ன குறைச்சல். ராஜாத்தி மாதிரியிருக்கா.

சீனு: காலத்துக்கு ஒட்டினாற்போலே அவள் பதவியும் மாறிண்டே வரது.

ராமு: ஏன் சலிச்சுக்கறே. உன் அப்பா, அம்மா எல்லாம் வேற ஊருக்குப் போய்விட்டா. வீட்டிலே நீயும் மங்களமும்தான். உம்...கேக்கணுமா? ஒரே அமக்களம்தான்.

சீனு: அமக்களம்னு சொல்லாதேங்கோ? போர்க்களம்தான்.

ராமு: ஏன் அப்படிச் சொல்றே? தங்கமான குணம்.

சீனு: பேரோ மங்களம்! குணமோ தங்கம்; அப்புறம் எனக்கு என்னதான் வேறு வேணும்?

ராமு: சரி, அதே வீடுதானே?

சீனு: இல்லையே

ராமு: பின்னே?

சீனு : வீடு பார்த்தாகணும் ; நாங்க இருந்த வீட்டுக்காரன் தானே அந்த வீட்டுக்கு வராணம். நோட்டீஸ் கொடுத்துட்டான்.

ராமு : ஆமாம். வீட்டுச் சொந்தக்காரா வேறு என்ன தருவா ?

சீனு : நானும் இந்த ஊரை சல்லடை போட்டுப் பார்த்துட்டேன்.

ராமு : அடே, சல்லடைக்குள்ளே இந்த ஊரு அகப்பட்டு விடுகிறதா ?

சீனு : அப்படிச் சொல்ல வரல்லே. பார்க்காத வீடே கிடையாது. தேடாத தெருவு கிடையாது. சொல்லாத ஆசாமி கிடையாது.

ராமு : எல்லார் கிட்டேயும் சொல்லிட்டா, சொன்னதைப்போல ஆகுமா? ராமண்ணா காதுக்கு சமாசாரம் இப்போதானே எட்டித்து ?

சீனு : எனக்கென்னமோ மனசு நிம்மதியாயிருக்கு.

ராமு : என்ன சீனு, திடீரென்று ஒரு போடு போட்டே.

சீனு : அங்கே தெரிவிச்சுண்டாச்சு. இனிமே கவலை எல்லாம் ராமண்ணாது,

ராமு : பயப்படாதே, போ.

சீனு : நான் போகத் தயார். ஆனால் திரும்பிவரச்சே ராமண்ணா பாத்துவச்ச வீட்டுக்குத் திரும்பி வராதாயிருக்கணும்.

ராமு : நீ போ, பாத்துக்கலாம்.

சீனு : ஒன்னு நிச்சயம் சொல்றேன்.

ராமு : என்ன ?

சீனு : வீட்டைக் கண்ணாடிமாதிரி வச்சிருப்பேன்.

ராமு : ஆமாம் கண்ணாடி விக்கற விலைக்கு, இதுவும் ஒரு சிக்கன முறைதான்.

சீனு: உங்களைத்தான் நம்பி யிருக்கேன்.

ராமு: பயப்படாதே. ராமுவை நம்பினோர் கை விடப் படார்.

(2)

சீனு: மங்களம்! சஞ்சாரம் என்ன பலமாயிருக்கு?

மங்களம்: சரி, என் சஞ்சாரம் இருக்கட்டும் உங்க சஞ்சாரம் என்னவாச்சு?

சீனு: எல்லாம் ராமண்ணா தலையிலே போட்டு விட்டேன்.

மங்க: ஐயோ, என்னத்தைப் போட்டீங்க?

சீனு: என், இப்படி கூச்சல் போடறே—இது என்ன சந்தையா?

மங்க: ஆமாம், நம்ப ரெண்டு பேரும் சந்திச்சுப் பேசினா சந்தை மாதிரி தானிருக்கு.

சீனு: இப்படி எல்லாம் பேசாதே; யாராவது நம்ப சண்டை போடறோம்னு நினைச்சுக்கப்போறா?

மங்க: நினைக்கணுமா என்ன?

சீனு: விதண்டா வாதம் பண்ணாதே.

மங்க: ஆமாம், புண்ணியமா? புருஷார்த்தமா?

சீனு: அம்மா தலைதான் மறஞ்சுதூன்னா, நீ இப்படியா உன் சுதந்திரத்தைக் கொண்டாடுவே!

மங்க: ராமண்ணா தலையிலே போட்டாச்சு. அம்மா தலை மறஞ்சுடுத்து. அப்புறம் என்ன பாக்கி? சொல்றதை எல்லாம் நேரா ஒரே அடியாய் சொல்லிப் புடுங்கோ.

சீனு: நீ சொல்றதும் சரிதான்.

மங்: என்னவாம்?

சீனு: ஒரே அடியாய்....

மங்: கொஞ்சம் நில்லுங்கோ, அப்புறம் வரேன்.

சீனு: நில்; இது என் கட்டளை.

மங் : தரை மேலே தானே ?

சீனு : பெரியவா சும்மா சொல்லிட்டுப் போகல்லே.

மங் : என்ன சொன்னார்கள் ?

சீனு : பாம்புக்கு ராஜா மூங்கில்தடி.

மங் : உங்களை யார் கையைப் பிடிச்சுண்டு தடுக்கறா. கிராமமிருக்கு. போங்கோ. நிரைய மூங்கில் போடுங்கோ. புதர்லெ போற பாம்பை எல்லாம் அடியுங்கோ.

சீனு : சரி, சரி,...எங்கேயோ பாயறயே ?

மங் : நானென்ன புலியா, பாயறதுக்கு ?

சீனு : மங்களம் !

மங் : என்னைக் கூப்பிட்டேளா ?

சீனு : வீடு பாக்கறது தான் பெரிய பிரச்னையா யிருக்கு.

மங் : வீடு பாக்கறது என்ன கஷ்டமா ?

சீனு : என்ன அப்படிச் சொல்றே ?

மங் : வீடு பாக்கறது கஷ்டமல்ல...அதை நமக்கு வாடகைக்கு பிடிக்கறதுதான் கஷ்டம்.

சீனு : என்ன இருந்தாலும் மங்களம் நீ கெட்டிக்காரி.

மங் : கெட்டிக்காரியா யில்லாட்டி, உங்க அம்மா என்னைத் தனிக் குடித்தனம் பண்ண விட்டுட்டு போவாளா ? அதுவும் இந்த ஊரிலே !

சீனு : அதுவும் இந்த காலத்திலே !

மங் : காலத்துக் கென்ன ? காலமும் நகர்ரது.

சீனு : நம்ப குடித்தனமும் நடக்கறது.

மங் : நடக்காமல் பறக்குமா ?

சீனு : வீடு வீடாய்ப் போய், வீடு காலி யிருக்கான்னு கேட்டுண்டே நடக்கறது.

மங் : அம்மா சொல்லிட்டுப் போனது சரிதான். எனக்கு இப்போதான் எல்லாம் சரியாய் புரியறது.

சீனு : அம்மா என்ன சொன்ன ?

மங் : எங்காத்துப் பிள்ளைக்குச் சமத்துப் போருது. உன்னை நம்பித்தான் போறேன், பாத்துக்கோன்னு, சொன்ன.

சீனு : நீயும் அம்மாவுக்கு விட்டுக் கொடுக்காமல் எனக்கு அபயம் அளித்தயோன்னோ !

மங் : இல்லேன்ன, உங்களை யார் பாத்துப்பா ?

சீனு : தன் மேலே இத்தனை அபார நம்பிக்கை எல்லாருக்கும் வருமா ? வராது. வரவே வராது.

மங் : இல்லாட்டா உங்கமாதிரி, ராமண்ணா எங்கே, கிருஷ்ண அண்ணா எங்கேன்னெல்லாம், நான் அலையறேன ?

சீனு : மங்களம் ! ரொம்ப சாமர்த்தியமாகப் பேசறயே !

மங் : எல்லாம் சகவாசதோஷம்.

சீனு : பேஷ், அப்படிச் சொல்லு. சீனுவின் பத்தினின்ன அப்படின்ன இருக்கணும்.

மங் : அப்படி ஒண்ணும் விபரீதமா நினைச்சூடாதேங்கோ.

சீனு : என்ன புதிர் போடறயே ?

மங் : உங்ளோடு பழகினதிலே வந்தூடல்லே ?

சீனு : பின்னே எப்படியாம் ?

மங் : இதெல்லாம் பரம்பரையாய் ஒரு சிலருக்கு நேரும் பாக்கியம். தெரிஞ்சுதா ?

சீனு : நன்ன தெரிஞ்சுது. உங்க அம்மாவோட இந்த குணம் மட்டும் உனக்கு வந்திருக்கு.

மங் : என்ன, அப்புறம் எந்த வீட்டுக்குப் போறதாக உத்தேசம் ?

சீனு : நாலு ரூம், ஒரு சமையல்காரன், ப்யூன் வாசல்லே கார், தோட்டத்திலே பூ, எல்லாத்துக்கும்,

மேலா மந்தஹாஸ மங்களம். இந்த மாதிரி வீடு இருந்தா எனக்குப்போதும். நான் என்ன ரொம்ப ஆசைப்பட றேனு?

மங் : ஆசைப்பட்டுத்தான் பாருங்களேன். உங்க ளுக்கு கிடைக்கிறதுதான் கிடைக்கும்.

சீனு : கிடைக்கிறதென்ன? கிடைச்சூடுத்தே. அதுக்கு என்ன சொல்றே?

மங் : எது?

சீனு : எல்லாத்துக்கும் மேலா மந்தஹாஸ மங்களம் போதாதா?

மங் : என் பிழைப்புக்கு மந்தஹாஸம் வேறே ஒண்ணு தான் பாக்கி.

சீனு : அது ஒன்னுதான், மங்களம், எத்தனை காசு செலவழிச்சாலும் கிடைக்காதது. அதுக்கு எல்லாரும் படற வக்கமும், தவிப்பும், உனக்கு தெரியுமா? பணமே தோல்வி யடைஞ்சு பெரு மூச்சு விட்டுதுன்னு, கேக் கணுமா?

மங் : மங்களம், சமாசாரமே வேறு?

சீனு : ஆஹா, தெரிஞ்சுண்டேன். சரி, இன்னும் இரண்டு நாளிலே நமக்கு வீடு அகப்படா விட்டால் நம்ப குடித்தனம் எங்கே நடக்கும் தெரியுமோன்னே!

மங் : எங்கே நடந்து ஓடிப்போகப் போகிறது?

சீனு : அதோ தெரியரது பார்!

மங் : எது?

சீனு : அந்த ஆலமரம்.

மங் : ஆல மரமா?

சீனு : அதன் கீழ்தான்.

மங் : எனக்கு ரொம்பநாளா ஆசை.

சீனு : என்ன?

மங் : ஏன் நடத்தக்கூடாது?

சீனு : எதை ?

மங் : நம்ப குடித்தனத்தைதான்.

சீனு : அந்த மரத்தடியிலா ?

மங் : என் பயப்படறேள் ? நான் இருக்கேன்.

சீனு : அம்மா மங்களம் சிமத்துன்னு சொன்னது சும்மா போகல்லே.

மங் : என்ன பயம் உங்களுக்கு ! அந்தப்பறவை களில்லையா ?

சீனு : அதுகள் பறக்கும் ; நம்ப சமாசாரமும் இப்போ பறந்துண்டு தானிருக்கு. வேடிக்கை போதும்.

மங் : வேடிக்கைதான் புதுக்குடித்தனத்தின் முதற் படி.

சீனு : ஜீவநாடி.

மங் : அஸ்திவாரம் !

சீனு : கலகலப்பான முகப்பு.

மங் : போதும், போதும்.

சீனு : என்ன ?

மங் : நம்ப வார்த்தை அடுக்குத்தான்.

சீனு : அப்படிச் சொல்லாதே, பேச்சிலேதான் ஆனந் தம். மகிழ்ச்சி அரும்பும் குதூகலம் கொடி விடும் மணம் மலரும்.

மங் : போதும் இந்தப் பூந்தோட்டம். வீட்டுக்கு என்ன ஏற்பாடு செஞ்சிருக்கேள் ?

சீனு : உன்கிட்டே தமாஷ் பண்ணினேன். பயப் படாதே, எல்லாம் ஆய்டுத்து,

மங் : என்ன வீடு பார்த்தாச்சா ?

சீனு : பாத்து நாலு நாளாகிறது.

மங் : அடேடே ! என்கிட்டே ஏன் சொல்லல்லே.

சீனு : சீனுவின் சாமர்த்தியத்தைக் கடைசி சமயத்தில் காண்பிக்கலாம் என்றிருந்தேன். அடாடா, என்ன ஜோரான வீடு தெரியுமா!

மங் : சரி, அந்த வீட்டை நிச்சயம் பண்ணீட்டேளா ?

சீனு : மங்களம், ஏன் இந்தப்பதட்டம் ?

மங் : எப்போதுமே உங்களுக்கு முன்யோசனை கிடையாது. என்ன அவசரம் ?

சீனு : அவசரமா ? ஊர் இருக்கற நிலைமை உனக்கு எப்படித்தெரியும் ? ஒரு அடிகூட கிடைக்க மாட்டேங்கிறது.

மங் : அது ஒன்றுதான் பாக்கி. யாரையாவது வம்புக்கு இழுத்து அடிவாங்கிண்டுவந்து நிக்காதிங்கோ !

சீனு : அட பைத்தியமே நான் அதைச் சொல்லல்லே. ஒரு அடிகூட வீடு கிடைக்கறது கஷ்டம்னு சொல்ல வந்தேன்.

மங் : நான் ஒத்தி இருக்கேன்னு உங்களுக்கு தெரியாதா ?

சீனு : மங்களம், என்ன அப்படிச் சொல்றே.

மங் : ஏன் சொல்ல மாட்டேன் ?

சீனு : உன்னைத்தான் பாத்துண்டேயிருக்கேனே ?

மங் : பாத்திண்டிருந்தா போதுமா ?

சீனு : பின்னே என்ன செய்யச் சொல்றே ?

மங் : ஒரு வார்த்தை என் கிட்டே கேட்கக் கூடாது. வீட்டிலே ஒருத்தி இருக்காளேன்கிற நினைவு துளி இருந்தா, இப்படியா அசட்டு பிசட்டுன்னு காரியம் செய்வாளா ?

சீனு : நான் என்ன தப்பு பண்ணி விட்டேன் ?

மங் : ஒண்ணு இருந்தா சொல்லலாம்.

சீனு : கொஞ்சம் இரு...

மங் : எங்கே எழுந்து போறேங்க.

சீனு : ஒரு பேப்பரும் பென்ஸிலும் கொண்டு வறேன். என் தப்பை வரிசைக் கிரமமா எழுது. எது உடனே கவனிக்க வேண்டியதென்னு எனக்குப் படறதோ அதை...

மங் : போறும் போறும், உங்க யோசனை. உக்காருங்கோ. என் கிட்டே கேக்காமல் ஒன்னும் செய்யாதேங்கோன்னு, என் அத்தனை வீம்பு!

சீனு : உன்னைக் கேக்காம பேசிட்டு வந்தது தப்பு அவ்வளவுதானே?

மங் : சொன்னா கோபிச்சுக்கறேள். நானும் ஒரு வீடு பாத்துட்டு வந்திருக்கேன்.

சீனு : அடேடே! இதை அப்பவே சொல்லக் கூடாதோ?

மங் : இப்படித் தாறு மாறா நீங்க செய்வேள்னு யார் நினைச்சா?

சீனு : புது வீடு பேசி முடிக்கறது தப்பா?

மங் : இப்போ நானும் ஒரு வீடு பார்த்துட்டேனே!

சீனு : ஒத்தரை ஒத்தர் கேட்காம செஞ்சால் இப்படித்தான்.

மங் : நீங்க உடனே சொல்லக் கூடாதோ?

சீனு : நீ உடனே சொல்லக் கூடாதோ?

மங் : நான் அட்வான்ஸ் வேறு கொடுத்திருக்கேனே!

சீனு : அது வேறயா? கடவுளே! நானும் கொடுத்துட்டேன்.

மங் : சரி, புதுக் குடித்தன பட்ஜட் டில் முதல் ஐடம் இரட்டைச் செலவோடு ஆரம்பிங்கோ.

சீனு : நன்னா வீடு பார்த்தோம்! சரி நீ பாத்த வீடு எப்படி யிருக்கு?

மங் : வீடுன்னா அப்படியே கண்ணிலே ஒத்திக்கலாம் போலிருக்கு.

சீனு : உம். அப்புறம்.

மங் : இரண்டு ரூமிருக்கு... ஹால்...

சீனு : ஹால் வேறயா ?

மங் : ஹால் தனி. நல்ல காத்து.

சீனு : அதுக்குத் தனி வாடகை உண்டோ ?

மங் : அதுக்கும் கூடிய சீக்கிரத்திலே வீட்டுக்காரா வாடகை கேட்பா போலிருக்கு.

சீனு : அது ஒன்னுதான் பாக்கி.

மங் : வீடாளு வீடா ?

சீனு : பின் என்ன தான் அந்த வீட்டிலே இல்லே.

மங் : பைப் இல்லே.

சீனு : அப்புறம் குழா தண்ணீருக்கு எங்கே போறது?

மங் : தெருக் கோடியிலே குழாயடி யிருக்கு.

சீனு : குழாயடியிருக்கு. அதைச் சுத்தி அடிதடியு மிருக்கு. நீ சொல்ற வீட்டுக்குபோனு உனக்குக் குத்துச் சண்டையிலே நல்ல பழக்கம் தானே வந்து விடும்.

மங் : ஆமாம், சொன்னபடி கேக்கற வீட்டுக்காரன் இல்லாட்டா, எப்படி வழிக்குக் கொண்டு வரது.

சீனு : நல்ல வீடு பார்த்தே.

மங் : நீங்க பாத்து வந்த வீடு எப்படி ?

சீனு : அருமையான வீடு.

மங் : பெருமைபோதும் ! என்ன இல்லேங்கிறதைச் சொல்லுங்கோ.

சீனு : லேட்டுதான் இல்லே.

மங் : சரி, தினசரி இன்னியிலிருந்து பழகிக் கோங்கோ.

சீனு : எதை ?

மங்: ஒரு பெரிய கூட்டத்துக்குள்ளே எப்படி பாயறது. அதுவும் சும்மாயில்லே. கையிலே ஒரு புட்டியுடன்.

சீனு: எண்ணெய் வேட்டைக்கா?

மங்: சாமர்த்தியமிருந்தால் பிழைக்கிறோம்.

சீனு: நீ ஒன்னும் பயப்படாதே. குடித்தனத்தை நடத்தியே பார்த்து விடலாம்.

(3)

சீனு: மங்களம், இந்த வீட்டையா நீ பார்த்தே?

மங்: அடேடே, இதே வீட்டையா?

சீனு: நான் பார்த்த வீடுன்னு இது.

மங்: நான் முந்தியே பாத்துட்டே நிச்சயம் பண்ணின வீடுதான் இது.

சீனு: பொய்.

மங்; ஏனும்?

சீனு: குழா இல்லேன்னயே?

மங்: பின்னே எங்கேயிருக்கு?

சீனு: நன்னு வீட்டைப் பார்த்தாயா?

மங்: பேஷாக!

சீனு: சரி, சமையலறையைப் பார்த்தாயா?

மங்: குழாயிருக்கே! நான் பார்க்கச்சே சமயலறை பூட்டியிருந்தது. ஜன்னல்வழியாய் எட்டிப் பார்த்தேன். குழா இருந்ததாகத் தெரியல்லே. வீடு காண்பிக்க வந்தவனை கேக்கணம்னு நினேச்சேன். அதை மறந்துட்டேன்... ம்...அது சரி, வீட்டிலே லைட் இல்லேன்னேளே?

சீனு: நான் பார்க்கறப்போ லைட் இல்லே. நானும் லைட் போட்டாகணும்னு வீட்டுக்காரன் கிட்டே கண்டிப்பா சொன்னேன். சரி, போடறேன்னுன். ஆனு, இத்தனை சீக்கிரம் போடுவான்னு யார் நினேச்சா?

மங் : நினைப்பு இருக்கட்டும். நம்ப குடித்தனம் நன்னு நடக்கும்னுதான் எனக்குப்படறது.

சீனு : ஜோஸ்யம் எப்போ கத்துண்டே ?

மங் : இப்படி மனமொத்து இரண்டு பேருமா ஒரே வீட்டைப் பார்த்தோம்' பாருங்கோ — அதுதான் ஆச்சரியம்.

சீனு : எனக்கு சந்தேகமா யிருக்கு.

மங் : என்ன திடீர்னு ?

சீனு : எல்லாம் ராமண்ணுதான் காரணம்.

தி கோவாபரேடிவ் பயர் & ஜெனரல் இன்சூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

டெலிபோன் : **4361.** தந்தி : **கோப்பயர்**

எல்லா விதமான நெருப்பு இன்சூரன்ஸும்
பிடலிடி உத்திரவாத இன்சூரன்ஸும் செய்யப்படுகின்றன

தலைவர் :
ராவ்பகதூர் டி. எம். சின்னய்யா பிள்ளை எம்.ஏ., பி.எல்.
திறமையான நிர்வாகம்

உங்கள் சொத்தையும் பொருள்களையும் இன்சூர் செய்து விட்டு கவலையற்று இருங்கள். குறைந்த கட்டணத்தில் பிடலிடி பாண்டுகள் எடுத்துக் கொள்ளலாம்

விபரங்களுக்கு : **P. ஷண்முகம்**, பி.ஏ.,
காரியதரிசி, தபால் பெட்டி 1249,
ஜி.டி., சென்னை.

முதல் காதல்

விசாலம் இராமசாமி

ஒரு பெரிய காடு. நானாவித புதர்களும் முட் செடிகளும் வானளாவிய மரங்களும், பார்பதற்குப் பயங்கரத்தை உண்டுபண்ணுகின்றன. எங்கேயோ ஒரு மரப் பொந்தி லிருந்து ஆந்தையின் கர்ண கடூரமான குரல் கேட்கிறது. நடு நடுவே, சிங்கம் உறுமும் சத்தத்தைக் கேட்டு, முயல் களும் மான்களும் பயந்து பதுங்கிப் பதுங்கி ஓடுகின்றன. நானும் இந்த காட்டில் வசிக்கிறேன் என்பதை காட்டுவது போல் காகங்கள் சட சட வென்று தங்கள் இறக்கைகளை அடித்துக் கொள்ளுகின்றன. எங்கும் வியாபித்திருக்கும் இயற்கை இப்படி யெல்லாம் காணக்கிடக்கிறது. இரவு மணி பதினொன்று இருக்கும். நிலா பால் போல் காய்ந்தும், காடு முழுவதும் ஒரே இருட்டு. சிற்சில இடங்களில் மரங் களின் இடையில் தோன்றும் சந்துகளில், இந்த சிறு இடங்களே தனக்குப் போதும் என்று தன் குளிர்ந்த ஒளியை வீசிக் கொண்டிருந்தான் சந்திரன்.

ராதையும் ஸ்ரீகண்ட்டும் கைகோர்த்துக் கொண்டு அக் காட்டு வழியாக சென்று கொண்டிருந்தார்கள். நாக தாளி புதர்களின் முட்கள் அவர்கள் உடம்பைக்கீறி உடைகளைக் கிழித்தன. அதை அவர்கள் கொஞ்சமும் பொருட் படுத்தவில்லை. தங்கள் கால்கள் போனபடி போய்க் கொண்டே இருந்தார்கள். அவர்களுக்குப் பசி இல்லை, தாகமில்லை. அவர்கள் மனதில் ஆனந்த மொன்றே தாண்டவமாடிக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு புலி அவர்கள் பின் பாய்ந்தது. ராதை ஐயோ என்று அலறினாள். இருவரும் ஓடிக்கொண்டே இருந்தார்கள்; புலி அவர்களை விடாமல் துரத்திக்

கொண்டே சென்றது. சற்றுமுன் இன்ப தெய்வமாகிய காதல் அவர்கள் உள்ளங்களில் உண்டாக்கிய ஆனந்தப் பெருக்கை மாற்றி இப்பொழுது காதல் என்ற பெரும் பிசாசு, அவர்கள் மனதில் புகுந்து பயத்தைக் கொடுத்தது. எங்கும் இருள் மயம். ராதையின் கண்களுக்கு ஸ்ரீகண்ட் தெரியவில்லை. ராதை அவனை விட்டுப் பிரிந்து வெகுதூரம் போய் விட்டாள். ஸ்ரீகண்ட் வெகுதூரம் போய் இருப்பான். தற்செயலாய் அவன் திரும்பிப்பார்த்த பொழுது, தன்னைத் துரத்திக்கொண்டு வந்த புலி எங்கேயோ நின்று விட்டதை அறிந்தான். "ராதை...?" அவனுடைய அருமை ராதை எங்கே? "ராதா! ராதா! நீ எங்கே இருக்கிருய்?" ஸ்ரீகண்ட்டுடைய குரல் காடு முழுவதும் எதிரொலித்தது.

ஸ்ரீகண்ட் அலறி கட்டிக்கொண்டு எழுந்தான். முழுவதும் கனவுதான். வாழ்க்கையிலும் ராதை அவனை விட்டு வெகு தூரம் போய் விட்டாள்.

* * * *

ஸ்ரீகண்ட் முதல் முதலில் காதலித்தது ராதையைத் தான். கடைசியில் அவன் காதலித்தப் பெண்ணும் ராதையே. ராதையை சந்தித்ததற்கு முன் அவன் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிருன். ஆனல் அவன் மனதில் ஒரு பெண்ணும் புகுந்ததில்லை. ராதை மாத்திரம் அவன் மனதில் இடியா கோட்டையாக ஆழத்தில் ஊன்றி விட்டாள். அவர்களுடைய சந்திப்பு கொஞ்சநாள்தானென்ருலும் அது வேறு விதமாகவே இருந்தது. ஸ்ரீகண்ட் அறையில் காற்று வராததால் அவன் மொட்டை மாடியில் ஈசிச்சேரில் சாய்ந்த வண்ணம், சுகந்தமான காற்றை அநுபவித்துக் கொண்டிருந்தான். அதே சமயத்தில் அடுத்த மாடியில், ராதை தோன்றினள். ஸ்ரீகண்டைப் பார்த்ததும் அவள் திரும்பிப் போகப் புறப்பட்டாள். அதே சமயத்தில் ஸ்ரீகண்ட்டும், ராதை தனிமையில் இருக்கும் பொழுது அங்கிருப்பது உசிதமல்ல என்று எண்ணியவனாய் எழுந்து நின்ருன். அப்போது தற்செயலாய் இருவர் கண்களும் சந்தித்தன. ராதை வெட்கமடைந்து, உள்ளே வேகமாய்ச் சென்று விட்டாள். தினம் தினம் ராதை ஸ்ரீகண்ட் என்ன செய்கிருன் என்று பார்ப்பது வழக்கமாய்

விட்டது. ஸ்ரீகண்ட்டும் ராதை தன்னை கவனிக்கிறாளா என்று அடுத்த வீட்டு மொட்டை மாடியையே உற்றுப் பார்க்கும் வேலையாய் விட்டது. நாளடைவில் வேடிக்கையாய் நினைத்த காரியம், ஆபத்தாய் முடிந்து விட்டது.

திடீரென்று ஸ்ரீகண்டை லாகூருக்கு மாற்றி விட்டார்கள். முதன் முதலில் ராதையைப் பார்க்காமலிருந்தது அவனுக்கு நிரம்ப கஷ்டமாகவே இருந்தது. ஆனால் வேலையின் தொந்தரவினால் வர வர அவனுக்கு ராதையின் நினைவு மறந்து கொண்டே வந்தது.

*　　*　　*　　*

நம்முடைய உயிருக்குயிரான சிநேகிதர். எப்பொழுதும் அவருக்கு நன்மை செய்வதிலேயே கருத்தாய் இருப்போம். அவர் சிரித்தால் நாம் சிரிப்போம். சிநேகிதர் அழுதால் நாமும் கண்களைத் துடைத்துக் கொள்வோம். அப்படிப் பட்ட சிநேகிதர், நம்மை விட்டுப் பிரிந்து விடுகிறார். அப்பொழுதெல்லாம் நாம் மீளாத் துயரத்தில் ஆழ்ந்து விடுகிறோம். வருத்தம் எல்லாம் கொஞ்ச நாள் தான். நாம் இரண்டு கடிதம் அவருக்கு போடுவோம். சிநேகிதர் இரண்டு கடிதங்கள் நமக்கு எழுதுவார். அதோடு பந்தம் பட்டென்று அறுந்துவிடும். நாம் சிநேகிதர் உயிரோடு இருக்கிறாரா அல்லது யமலோகத்திற்கு தான் போய் விட்டாரா, இதுகூட நாம் அறிய விரும்புகிறதில்லை. அவரைப் பற்றியும் நினைவும் வருகிறதில்லை. ஆனால் பழய சிநேகிதரை மறுபடியும் காணும் பொழுது, பட்டுப்போன அன்பு திரும்பவும் துளிர்க்க ஆரம்பிக்கும்.

ஸ்ரீகண்டை லாகூரிலிருந்து, பம்பாயிக்கு மாற்றலானதும், எதிர்பாராதவிதமாய் ராதையின் அருகே தன்னை விதி இழுத்து விட்டதை நினைத்து பயமடைந்தான். அதனைக் கண்டதும் அவனுடைய அன்பு செழிப்பாக வளர ஆரம்பித்தது. அவன் மனம் அவளைப்பற்றி எண்ணாத எண்ணங்களெல்லாம் எண்ணிற்று. மனதிற்கு என்ன, அதன் பிடியை கொஞ்சம் தளர்த்தி விட்டால், அது சீமைக்கும் போகும், ஜர்மனிக்கும் போகும். எதிர்

பாராத சந்திப்பினல் ஸ்ரீகண்ட்டுடைய மூளே அபார மாய் வேலே செய்யத் தொடங்கி விட்டது. பழைய காதல் வெள்ளம் ராதையைப் பற்றிய சிந்தனேகளே ஒரு புறமாக ஒதிக்கி வைத்திருந்ததை புது வெள்ளம் கரைகளே யெல்லாம் அடித்துக் கொண்டு போகப் புறப்பட்டது. ஸ்ரீகண்ட், அவசர அவசரமாக ராதைக்கு ஒரு கடிதம் எழுதினன். தான் அவளே உள்ளன்புடன் காதலித்ததை யும், நடுவில் வேலேயின் நிமித்தம் வடநாட்டுக்குசென்ற தையும்; ஆனல் அவளே ஒரு நிமிஷமும் மறந்திருக்கவில்லே என்றும் கடிதத்தில் விவரித்திருந்தான். கடிதத்தை கையில் வைத்துக் கொண்டு ராதை மேல்மாடிக்கு வரும்பொழுது அதை அவள் பக்கமாக எறிந்து விட்டு வந்து விட வேண் டியது என்று யோசனே பண்ணிக் கொண்டு, ஸ்ரீகண்ட் மொட்டை மாடியில் உலாவிக் கொண்டிருந்தான். வெகு நேரத்திற்குப் பிறகு யாரோ படியில் ஏறிவரும் சத்தத் தைக்கேட்டு ராதைதான் வருகிருள் என்று எண்ணிக் கொண்டு ஸ்ரீகண்ட் கடிதத்தை தன் பலம் கொண்ட மட் டும் வீசி எறிந்தான். என்ன ஏமாற்றம்! ராதையின் வீட்டு வேலேக்காரன் ஒரு துடப்பத்தை கையில் எடுத் துக் கொண்டு படிகளின் வழியாக வந்து கொண்டிருந் தான். ராதைக்கு எழுதப்பட்ட கடிதம் காற்றில் பறந் துக் கொண்டிருந்தது.

* * * *

ராதைக்கு இரவெல்லாம் தூக்கம் பிடிக்கவில்லே. அவள் மனதில் தான் ஏதோ தகாத காரியம் செய்து விட்டதாக எண்ணினள். அவள் கணவன் கோபாலன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் ராதையின்மீது சந்தேகம் எதுவும் கொண்டிருப்பதாக தெரியவில்லே. அமைதியான அவன் முகத்தைப் பார்க்கை யில் ராதைக்கு, தான் அவனுக்கு பெரிய துரோகம் செய்து விட்டதாக கருதினள். முதல் காதல் புயல் அவள் மீது வீசாமல் இருந்தால்......? அவளும் அவள் கணவனேப் போல் களங்கமற்று எவ்வளவு சந்தோஷத்துடன் வாழ்க் கையை நடத்தலாம். நான்காம் வீட்டிலிருந்து ஒரு கிராம போன் "ஆசை முகம் மறந்து போச்சே, அதை யாரிடம் சொல்வேனடி தோழி" என்ற பாரதியார்

208429.

பாட்டை பாடிக் கொண்டிருந்தது. வெகு தூரத்தில் பாட்டுக்கு சுருதி போடுவது போல் ரயில் கடகட வென்ற சத்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது.

* * * *

ரோஜாத் தொட்டியில் அன்று ஒரே ஒரு பூ பூத்திருந்தது. ரோஜாவின் இதழ்கள் அகல விரிந்துப் பார்ப்பவர் மனதைக் கவர்ந்து கொண்டிருந்தது. அதன் அருகாமையில் இருந்த மொக்கு குவிந்த வாயோடு, "நீ உலகத்தை விரித்துப் பார்த்தாயானல், நான் குவிந்த படியே பார்த்து உள்ளம் மகிழ்வேன்" என்று சொல்வது போல், பூத்த ரோஜாவையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. ஸ்ரீகண்ட் அன்று வெகு காலையிலே எழுந்து விட்டான். நேரே ரோஜாச் செடியின் அருகே போய் பூ நன்ருக பூத்து விட்டதா என்று ஆராய ஆரம்பித்தான். இதுவரையில் அந்தச் செடி எத்தனையோ பூக்களை பூத்து, பிறகு உலர்ந்து தானகவே ஒருவரும் பறிப்பாரன்றி உதிர்ந்து போகும். எப்பொழுதாவது ஒரு சமயத்தில் ஸ்ரீகண்ட் நண்பர்கள் யாருக்காவது கொண்டு போய் கொடுக்கலாமென்று பறித்து மேஜைமீது எடுத்து வைப்பான். ஆனல் அவன் காரியாலயம் போகும் பொழுது, அதை நண்பனுக்கு எடுத்துக் கொண்டுபோக மறந்து விடுவான். இத்தனை நாள் யாருமே அனுபவிக்காத அந்த ரோஜா, இன்று ஒரு அழகிய பெண்தலையில் இருக்குமல்லவா? என்று ஸ்ரீகண்ட் எண்ணும் பொழுது தான் அந்த ரோஜா புஷ்பமாக இருக்கக்கூடாதா என்று ஸ்ரீகண்ட் அந்த ரோஜாவைப் பார்த்து பொருமைப் பட்டான். ஸ்ரீகண்ட் ஒவ்வொரு நிமிஷமும் ராதையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனல் ராதையை கண்ணிலே தென்பட வில்லை. காலை போயிற்று. அதன் பிறகு வழக்கப்படி மாலையும் வந்தது இன்னும் ராதையை காண வில்லை. அவளுக்காக வைத்திருந்த ரோஜா புஷ்பம் வாடி வதங்கிப் போயிற்று. ஸ்ரீகண்ட் மனம் வெறுப்புக் கொள்ள ஆரம்பித்தது. ரோஜாவிலுள்ள அவ்வளவு வாடின இதழ்களையும் ஒவ்வொன்ருய்ப் பிய்த்து பிய்த்து தூர எறிந்தான். தூரத்தில் ஏதோ ஒரு சத்தம் கேட்டது. ஸ்ரீகண்ட் கவனித்து கேட்டான். ராதையும் கோபாலனும்

சிரித்துக் கொண்டு இருந்தது அவன் காதில் நாராசம் காய்த்து வார்த்தது போல் இருந்தது.

* * * *

ராதையின்முன் கிழிக்கப்பட்ட காகிதத் துண்டுகள் விழுந்துக் கிடந்தன. ஸ்ரீகண்ட்டுக்கு எழுதப்பட்ட அநேக கடிதங்கள், உருப்படாத, அவள் கையாலேயே கிழிக்கப் பட்டன. கடைசிதரமாய் மறுபடியும், ராதை கடிதம் எழுதுவதில் மனதை செலுத்திக்கொண்டிருந்தாள்:—

ஸ்ரீகண்ட், உன்னை நான் காதலிக்க வில்லை. உன்னை என் முழுமனதுடன் வெறுக்கிறேன். என்னைப்பற்றி உன் மனதில் நீ ஏன் நினைத்துப் புலம்புகிருய்? இப் பொழுது நான் வேறொருவருடையவளாகி விட்டேன். உண்மையில் ஸ்ரீகண்ட், அவரை நினைத்துப் பார்க்கையில் அவரைப்போல் தங்கமானவர் இந்த பரத கண்டத்திலே கிடையாது என்றுகூட நிச்சயமாய்ச் சொல்லலாம். என்னை அவர் தன் முழு உள்ளத்துடன் நேசிக்கிறர். அதற்கு பிரதி உபகாரம் நான் என்ன செய்கிறேன் தெரியுமா? உன்னையே என்மனதில் நினைக்கிறேன். இப்பொழுதுதான் தெரிகிறது. முதற்காதல் மிகவும் பொல்லாதது. அது மனதை விட்டு கொஞ்சமும் அகல வில்லை.

ஸ்ரீகண்ட்! அணைந்துபோன நெருப்பை திரும்பவும் மூட்டி விட்டாய். உன்னை கெஞ்சி வேண்டிக் கொள்ளு கிறேன். என்னை விட்டு நீ தூர சென்று விடு. நம் இரு வருக்கும் நன்மை. நீ இங்கு இருப்பதினல் என் கண வருக்கு நான் பெரிதும் துரோகம் செய்தவளாவேன்.

ஸ்ரீகண்ட், என்னை மறந்துவிடு. உன் மனதில் எழும் இடிந்துபோன காதற் புயலை, ஏன் மீண்டும் மீண்டும் நினைவுக்கு கொண்டு வருகிருய்? நானும் உன்னை மறக்க முயன்று கொண்டு வருகிறேன்.

அபாக்கியவதி ராதை.

கடிதத்தை எழுதி முடித்ததும், ராதை அதை முழு வதும் படித்துப் பார்த்தாள். உடனே அவள் மனதுமாறி, "இதென்ன பைத்தியக்காரத் தனம் அவர் யார்? நான்

யார்? நான் எதற்காக அவருக்குக்கடிதம் எழுத வேண்டும்? முதல் காதல் அல்லவா, இப்படிச் செய்ய என்னைத் தூண்டுகிறது?'' என்று நினைத்தாள் ராதை. அவள் நினைத்தபடியே ஒரு வரிகூட படிக்க முடியாதபடி கடிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்தாள்.

கோபாலன் காரியாலயத்திலிருந்து ஆவலோடு தன் மனைவியைப்பார்க்க ஓடிவந்தான். ஆனால் ராதை அவனை இன்று புன்முறுவலோடு எதிர்கொண்டழைக்கவில்லை. ''என்னை உனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லேன். நீ இதை சொல்லிவிடு: நான் இனி உன்னிடம் வரமாட்டேன்,'' என்றான். அந்த சமயத்தில் ராதை சிரித்து விட்டிருந்தால் கோபாலனுக்குப் பிறகு அவள் மீது கோபம் இருந்திருக்காது. ராதையோ சிரிக்கவில்லை. அதனால் பட்டுப்போன்ற மிருதுவான அவன் மனதில் கூர்மையான அம்பை எய்து விட்டாள். ''உங்களை எனக்குப் பிடிக்கவில்லை தான்,'' என்றாள். அப்பொழுதிருந்த ராதையின் மனநிலை வாயில் வந்ததை வெளியே கொட்டி விடும்படி செய்தது. அவள் உள்ளூர தன் கணவனை நேசித்தாள். ஆனால் ஏனோ, பழைய காதல் நினைவு அவள் மனதை களங்கப் படுத்திக் கொண்டே யிருந்தது.

கோபாலன் தன் அறைக்கு வேகமாகத் திரும்பி விட்டான். ''உங்களை எனக்குப் பிடிக்கவில்லைதான்'' என்று அவள் சொன்னது அவன் மனதில் ஒலித்துக் கொண்டிருந்தது. கைகளைப் பின்புறத்தில் கட்டிக் கொண்டு ஹாலில் குறுக்கும் நெடுக்குமாக வெகு நாழி நடந்துக் கொண்டிருந்தான். எதிரில் உள்ள சுவரில் கலியாணத்தின்போது எடுத்த புகைப் படத்தில் ராதையும் கோபாலனும் மணக் கோலத்துடன் காட்சியளித்துக் கொண்டிருந்தனர். ''என்னைத்தான் உனக்குப் பிடிக்க வில்லையே, படத்தில் மாத்திரம் என்னோடு நீ ஏன் இருக்கவேண்டும்?'' என்று சொல்லிக்கொண்டே கோபாலன் படத்தையெடுத்து கவிழ்த்து மாட்டினான். கோபாலன் முகத்தில் முத்து முத்தாக வேர்வை அரும்பிக் கொண்டிருந்தது. ஜோபியில் கையை விட்டுக் கைகுட்டையை எடுத்து முகத்தைத் துடைக்கப் போனவன், அதில் ராதையால் தைக்கப்பட்ட பூ வேலைகளைப் பார்த்து, ''சீ, இதிலுமா

நீ இருக்க வேண்டும்? நீ தைத்த கைகுட்டை எனக்கு வேண்டியதில்லே," என்று கோபத்தோடு அதைக் கசக்கி ஜன்னல் வழியாகத் தூர எறிந்தான்.

சுவரில் மாட்டி இருந்த கடிகாரம், "நான் ஒழுங்காக வேலே செய்கிறேன்," என்று சொல்லுவது போல் டாங் டாங் கென்று தனது கம்பீரமான குரலில் பன்னிரண்டு அடித்தது.

ராதை முன்னிருந்தபடியே அதே இடத்தில் எதையோ யோசித்தவாறு நின்று கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் கடைசியாக ஸ்ரீகண்ட்டுக்கு எழுதப்பட்டு கிழித்தெறியப்பட்ட கடிதத்தின் சிறு துண்டுகள் காற்றில் பறந்து கொண்டிருந்தன. ராதை தனக்குள் ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டாள்.

"நான் எப்பேர்ப்பட்ட தவருன காரியம் செய்துவிட்டேன்? என் அன்பான கணவரின் மனதைத் துன்பப் படுத்தி விட்டேனே. அவர் என்னேப் பார்த்து என்னேடு கொஞ்சிக் குலாவ எவ்வளவு ஆசையோடு வந்தார். அவர் ஆசையை நிராசையாக்கி விட்டேனே. ஸ்ரீகண்ட், உன் பெயரை என் வாயினுல் சொன்னுல்கூட நான் பெரிய பாவம் செய்தவளாவேன். இல்லே, இல்லே, இனி உனக்கு ஒரு காலும் கடிதம் எழுத மாட்டேன்; எழுதிக் கிழித் துப் போடவு மாட்டேன். என் கணவரை என் மனதில் வைத்து வழிபாடு செய்யப் போகிறேன். நீ அதைக் கலேக் காதே. உனக்குக் கோடி புண்ணிய முண்டு."

அதற்கு அடுத்த நாள் ராதையின் மனம் எவ்வளவோ மாறிவிட்டது. எப்போதும் போல் இல்லாமல் அன்று அவள் மனம் பரிசுத்தமாக இருந்தது.

* * *

ரெயில் வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. அதற்குத் தான் என்ன ஆவேசம். ஒவ்வொரு கோட்டையாய் பிடிப் பது போல், ஒவ்வொரு ஸ்டேஷனேயடையும் பொழுது பெரு மூச்சுடன் நிற்கிறது. ஸ்ரீகண்ட் யாரை மறக்க ரெயில் பிரயாணம் செய்தாளே, அவளுடைய நினேவு தன் எதிரில் ராதையைப்போல் உட்கார்ந்திருந்த ஒரு பெண் ணுல் ஸ்ரீகண்ட்டுக்கு அடிக்கடி அவன் மனதில் ஸ்திரப்

படுத்திக் கொண்டே இருந்தது. "அவளைப் பார்க்கக் கூடாது," "அவளைப் பார்க்கக்கூடாது," என்று மனதை கட்டுப் படுத்தினலும், அவள் தன் கணவனுடன் பேசிய சில விஷயங்களால் அவர்கள் பேச்சை அவன் கவனிக்க வேண்டியதாய் விட்டது. அந்த அழகிய பெண் தன் கணவனுடைய காலேஜ் வாழ்க்கையை அறிய அவனைத் தூண்டி விட்டாள்.

கடல் மடைதிறந்ததுபோல் அவன் பேசிக் கொண்டே போனன். அவனுடைய காலேஜ் வாழ்க்கை ஸ்ரீகண்ட்டுடைய காலேஜ் வாழ்க்கையை கொஞ்சம் ஒத்திருந்தது.

அந்த அழகியினுடைய கணவன் காலேஜில் படித்துக் கொண்டு இருந்தபொழுது அவனுடன் மாலதி என்ற ஒரு பெண் படித்துக் கொண்டிருந்தாளாம். அந்த மாலதிக்கும் அவனுக்கும் ஒருநாள் வாசகசாலையில் காதல் உண்டாயிற்ரும். பிறகு எத்தனையோ நாட்கள் அவளுடன் இன்பமாய் கழித்தானும். திடீரென்று காலேஜ் படிப்பு முடிந்ததும் காதல் நூல் அறுந்து விட்டதாம். அப்பொழுது தன் உயிராக நினைத்த மாலதியை, இப்பொழுது அவள் உயிருடன் இருக்கிருளா என்றுகூட நினைப்பதில்லையாம். இதைச் சொல்லி விட்டு அவன் கடகடவென்று சிரித்தான். அவனுக்கு வாழ்க்கையே ஒரு விளையாட்டாகத் தோன்றிற்று. காதல் என்பது அவனுக்கு ஒரு விளையாட்டுச் சாமானுகத் தோன்றிற்று.

ஸ்ரீகண்ட் வெகு தூரம் செல்வதற்கு நினைத்துப் புறப்பட்டவன் இடையில் ஒரு ஸ்டேஷனில் இறங்கி சென்னைக்கே திரும்பி விட்டான். அவன் வீட்டுக்கு வரும்பொழுது, முதல் நாள் இதழ்கள் குவிந்து மொட்டாக விருந்த ரோஜா அப்பொழுது நன்ருக மலர்ந்திருந்தது. 'நேற்று வாடிப்போன ரோஜாவிற்காக நான் வருத்தப் பட்டுக் கொண்டிருக்கவில்லை. தினம் தினம் நான் பூக்களை சொரிகிறேன். என்னுடைய ஆனந்தம் மறுநாள் பூக்கப் போகும் ரோஜாவிலே இருக்கிறது' என்று ரோஜாச்செடி சொல்வது போல் இருந்தது.

சுகந்தமான காற்று எங்கும் வீசிக் கொண்டிருந்தது. அதோடு, இருண்ட மப்பு. 'பிளாக்கவுட்' ஒரு பிர

மாதமான இருளா? அதைவிட நான் இந்த சென்னை நகரை இருளடையச் செய்கிறேன்' என்று சொல்வது போல் நகர் முழுவதும் ஒரே இருள் கவிழ்ந்துக் கொண்டிருந்தது. தெருவில் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாது. ஸ்ரீகண்ட் ஜன்னல் வழியாகத் தெருவை வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்தான், அவன் எதைப் பார்த்தாலும் அது சூன்யமாகவே அவன் கண்களுக்குப் புலப்பட்டது. திடீரென்று அவன் மனம் ஒரு பிச்சைக்காரன் பாட்டில் சென்றது. அது ஒரு சோகமான பாட்டு. காதலர் இருவருக்கு திருமணம் நடக்க இருக்கையில், வைசூரி வந்து காதலி இறந்து விட்டாளாம். காதலியின் பிரிவாற்றுமையால் காதலன் ஒரு பைத்தியக்காரனாகிறான். இதுதான் அப்பாட்டின் கருத்து. ஸ்ரீகண்ட் எழுந்து தெருவிற்கு ஓடி பிச்சைக்காரப் பையனைக் கை தட்டிக் கூப்பிட்டு அவன் கையில் ஒரு ரூபாயை வைத்தான். பிச்சைக்காரன் பாட்டு அவன் மனதை முழுவதும் மாற்றி விட்டது. அவன் காதலியும் இறந்து போயிருந்தாளானால் அப்பொழுது அவன் என்ன செய்வான்? இந்த கேள்வியே அவன் மனதில் நாளாக நாளாக சாந்தியை உண்டுபண்ணி விட்டது. முதற் காதலை அடியோடு மறந்து, எதிர்கால வாழ்க்கையின் ஆனந்தங்களை வரவேற்க அவன் மனம் எல்லையில்லா உவகை கொண்டிருந்தது.

தண்டல்

பொ. சுந்தரமூர்த்தி நாயனர்

இன்று இலக்கணம் என்ருல் தமிழ் மாணவர்களுக்கு எவ்வளவு கசப்பாக விருக்கிறதோ, அவ்வளவு கசப்பாக விருக்கிறது தமிழ் வாசகர்களுக் குப் பொருளாதாரம் என்ருல். காதல் நிறைந்த சிறு கதைகள், நாவல்கள் என்ருல் காபி ஓட்டலில் நுழைந்து விட்ட மாதிரி. நம்மிடையே காபிப் பித்தமும், கதைப் பித்தமும், வளர வளர, நாட்டில் காபி ஓட்டல்களும், கதாபிரசுராலயங்களும் நாளுக்கு நாள் பெருகி வருகின் றன. இதனல் மக்களின்—முக்கியமாக இளைஞர்களின்— மனோ-தேக நிலைகள் கெட்டுவிட்டதாகச் சொல்ல முடியாவிட்டாலும் ஆரோக்யமாக இல்லை என்பது திண்ணம்.

கதைகள் இலக்கியத்தில் சிறப்பான இடத்தை வகிப் பவை. அவற்றை போற்றிப் பரப்புவது அவசியந்தான். ஆனல் மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொரு ளாதாரம், மருத்துவம், சரித்திரம் முதலான துறைகளை மறந்துவிட்டு, புனைகதைகளையே திரித்துக் கொண்டிருப் பது, குடல் கூழுக்கு அழும்போது கூந்தலுக்குப் பூவாங் கப் புறப்படுவதையே ஒக்கும். பொருளாதார அறிவைப் பெருக்கினல், நாட்டின் செல்வநிலை பெருகக் கூடும். ஏழை எளியவர்க்கேற்ற, மலிந்த மருத்துவமுறைகளைப் பெருக்குவதனல் மக்களின் பிணிகள் அகலக்கூடும். சரித் திரக்கல்வியால் பழைய பாரதத்தின் பெருமையும், இன் றைய பாரதத்தின் சிறுமையும் காணக் காணத் தாய் நாட் டுப் பற்று என்னும் உணர்ச்சி கொழுந்துவிட்டோங்க, விடுதலைக்கும் மார்க்க மேற்படக்கூடும். மற்றும், பூகோ ளம், தர்க்கம், அரசியல் முதலான பலவகைப்பட்ட புத்த-

கங்களைப் படிப்பதனால் பொதுமக்களிடையே 'பொது அறிவு' (General Knowledge) விருத்தியடையக்கூடும். காதற்கதைகளால் என்ன பிரயோசனம்? நம்மவருக்கு இன்று அவசியமான புத்தகங்கள் எத்தகையவை? இது பற்றி, தமிழ் நாட்டு எழுத்தாளர்கள், பிரசுராதிபர்கள், வாசகர்கள் ஆகிய முத்திறத்தாரும் சிந்தித்தல் வேண்டும்.

* * * *

சுமார் இருபது நூற்றாண்டுகட்குமுன் தமிழ் மக்கள் — நம் முன்னோர்கள்—நடாத்திய அரசியல், சமய, சமூக வாழ்க்கையின் சிறப்பை விளக்கிக் கூறும் நூல்களுள் 'புறநானூறு' என்னும் அரிய தொகைநூலும் ஒன்று. அதில் வரும் பாடல்களைப் பாடிய புலவர்கள் மிகப் பலர். அவர்களுள் பிசிராந்தையார் என்பாரும் ஒருவர். ஆந்தையார் என்பது அவர் இயற்பெயர். பிசிர் என்ற ஊரைச் சேர்ந்தவராதலால் பிசிராந்தையார் என்று சிறப்பாக அழைக்கப்பட்டார். எதேனும் ஒரு துறையில் பிரபலம் வாய்ந்த அறிஞரை அவர் ஊர்ப் பெயரையும் சேர்த்தே பெருமையாகக் குறிப்பது நம்மவர் மரபு. இன்னும் கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை, புரிசை முருகேச முதலியார், செம்மங்குடி சீனிவாசய்யர் என்றே பாராட்டி வருகிறோமல்லவா?

பிசிராந்தையார் அறிவிற் சிறந்த புலவர் பெருந்தகை. அவர் புலமையை மெச்சி, அவருடன் பெரு நட்புப் பாராட்டியவர் பாண்டியன் அறிவுடைய நம்பி என்னும் அரசர் பெருமான். அறிவுடைய நம்பி என்று புகழ் பெற்ற அவரும் பெரும் புலமைத்திறம் படைத்தவர். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்றபடி இருவரும் உள்ளன்புடன் ஒருவரை யொருவர் நேசித்து வந்தனர்.

அரசரும் புலவரும் ஒரு நாள் அளவளாவிக் கொண்டிருக்கும்பொழுது, பேச்சு பல விஷயங்களைப்பற்றித் தொடர்கையில், அரசாங்கத்தார் குடிமக்களிடமிருந்து வரிதண்டும் முறையைப்பற்றி, பிசிராந்தையார் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார். அது என்னவென்று பாருங்கள்.

"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறை வில்லதும் பல்நாட் காகும்;
நூறுசெறு வாயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடியாத்து நாடு பெரிது நந்தும்;
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே." (புறம். 184)

(மா=ஏகர், செண்ட் போன்ற நில அளவை. கிழவன் மெல்லியனாகி=அரசன் அறிவு ஆற்றல்களில் மெலிந்தவனாகி. பரிவு தப எடுக்கும் பிண்டம் = குடிகள் அரசன்பால் கொண்டிருக்கும் அன்புகெட்டு மனம் நோக, வசூலிக்கும் தண்டல் பொருள்).

பிசிராந்தையாரும் கதைதான் சொல்கிறார்! "இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்" பெருமான ஒரு யானை, பாகனின் அங்குசத்திற் கடங்கி; மக்கள் உழைப்புக் குதவியாக இருந்து வருகிறது. அவர்களும் சக்தானுசாரம் தங்கள் வயல்களில் ஒரு மா அளவேனும் ஒதுக்கி வைத்து, அதில் நெல், கரும்பு முதலான பயிர்களை வளர்த்து, தினமும் கொஞ்சங் கொஞ்சமாக அறுத்தெடுத்துக் கட்டுக் கட்டாகக் கொண்டு சென்று யானைக்கு உணவாகக் கொடுத்து ஆதரித்து வருவார்கள். திடீரென்று யானைக்கு மதம் பிடித்து விடுகிறது. பாகனையும் மீறிக் கட்டவிழ்த்துக்கொண்டு காட்டுக்கு ஓடத் தொடங்கி விடுகிறது. அப்போது பசி வேளையில் அதற்கு தீனிபோட யார் முன் வருவார்கள்? ஆனால் 'யானைப் பசி' என்றால் சாதாரணமா? கண்ணிற்பட்ட நூற்றுக் கணக்கான வயல்களிலெல்லாம் அலைந்து அலைந்து நாசம் செய்கிறது. யானையால் மேய முடியுமா? பருத்த அதன் துதிக்கைக்கு இளம் பயிர்கள் பிடி கொடுக்குமா? யானையின் வயிறு நிறைவதில்லை. அதன் காலடியிற் மிதியுண்டு அழியும் பயிரே அதிகமாகும். நெற்றி வியர்வை நிலத்தில்

விழ அரும்பாடுபட்டுப் பயிரிட்ட உழவர்களின் மனந் தான் வருத்தமடையும்.

ஒரு அரசன் கல்வி கேள்விகளிற் சிறந்த அறிவு உள்ளவன். தன் குடிமக்களின் வரவு செலவு முதலிய வற்றை விசாரித் துணர்ந்து அவரவர் சக்திக்கேற்ப நியாய மான வரி இன்னதென்று தீர்மானிப்பான். குடிகளும் மகிழ்ச்சியோடு அரசனுக்குரிய வரிப் பொருளைத் தவணை தவருமல் செலுத்தி வருவார்கள். அரசனுக்கும் வருமானம் தாராளமாக இருக்கும்; நாட்டிலும் வளம் கொழிக்கும்.

அதே அரசன் நாளடைவில், ஆடம்பரத்திலும் வீண் செலவிலும் நாட்டங் கொண்ட நட்பினர் சுற்றத்தினர் வலையில் வீழ்ந்து விடுகிருன். மெதுவாகத் தன் அறிவு ஆற்றல் யாவும் இழந்து விடுகிருன். செலவு பெருகப் பெருக, வரவு மட்டும் முன்னிருந்தபடியே இருக்கிறது; அல்லது குறைகிறது. அரசன் பல புதிய வரிகளை விதிக் கிருன். அவைகளை வசூலிக்கக் கடுமையான முறைகளைக் கையாள்கிருன். ஆனல் முடிவில், கழனியில் புகுந்த யானை, தன் வயிரும் நிரம்பாமல், வயலையும் அழிப்பது போல், தானும் சுகப்படாமல். குடிகளையும் வறுமைக்குள் ஆழ்த்தி அவர்கள் வெறுப்புக்கே ஆளாகி விடுகிருன்.

இந்த சின்னஞ் சிறு கதையில் எத்தனை பொருளாதார உண்மைகள் ஒளிந்திருக்கின்றன! பிரபல பொருள் நூல் வல்லுநர் ஆதம் ஸ்மித் (Adam Smith) உத்தம வரிமுறைக் கான அத்தாட்சிகளாகக் கூறும் நியாயம் (Equity) நிச்சயம் (Certainty) சௌகர்யம் (Convenience) லாப கரம் (Productivity) ஆகிய அநேக கருத்துக்களை இந்த யானைக் கதையில் காணலாம். ஸ்மித் சொல்வதுபோல் அரசாங்கத்தார் ஏற்படுத்தும் வரி, வரிகொடுப்போரின் சக்திக் கேற்ப நியாயமான தொகையா யிருக்க வேண்டும். அந்த வரி நிச்சயம் வசூலிக்கத் தக்கதா யிருக்க வேண்டும். வரி கொடுப்போருக்கும் தாம் செலுத்த வேண்டிய தொகை இவ்வளவு என்று நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டும். அந்த வரியை குடி ஜனங்கள் தம் சௌகர்யம் போல் ஒரே தடவையிலோ, பல தவணைகளிலோ (Instal-

ments) செலுத்தக்கூடியதாக இருக்கவேண்டும். அந்த வரியிலிருந்து குடிகளுக்கு லாபகரமான ஏதேனும் ஒரு வசதி விளையக் கூடியதாக யிருக்க வேண்டும். இப்பொழுது பாருங்கள்! யானை வெடியிலிருந்து கிளம்பும் நெருப்புபொறிகள்போல், பிசிராந்தையார் சொன்ன யானைக் கதையிலிருந்து இந்தப் பொருளாதாரக் கருத்துக்களெல்லாம் தெரிந்தெழுதுவதைப் பாருங்கள்!

* * * *

பண்டைத் தமிழகத்தில் தண்டல் கொண்ட முறையையே ஒரு அழகான கதையாகச் சோல்லி யிருக்கிறார் பிசிராந்தையார். தற்காலத் தமிழ் நாட்டு இலக்கிய மணிகளும் இத்தகையக் கதைகளைச் சொல்வதானால், அவர்கள் எவ்வளவு கதைகள் சொன்னாலும் 'போதும்' என்று சொல்ல மனம் வராது.

இந்த ஈரல் குலை கட்டி வியாதியை ஜம்மியின் "லிவர்க்யூர்" தான் நிச்சயமாக குணப்படுத்தும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்

மைலாபூர் :: :: மதராஸ்

ஏஜமானி

எஸ். அலமேலு

சர்க்கார் லாரி டிரைவர் குருசாமிக்கு 30-ரூபாய் சம்பளம். அவன் தன் மனைவி ராஜேஸ்வரியுடனும் குழந்தை உமாவுடனும் சுகஜீவனமே நடத்திவந்தானென்று சொல்லலாம். ஒரு நாள் அவன் லாரி ஓட்டிவரும் பொழுது எதிரில் வேகமாய் ஓடிவந்த காரில் லாரி மோதிக் கொண்டது. அதனால் யாதொரு சேதம் சிறிதுகூட ஏற்படாவிட்டாலும், அவன் ஸர்க்கார் லாரியை அஜாக்ரதையாக உபயோகப் படுத்தினனென்று அவன் வேலையிலிருந்து நீக்கப்பட்டான். அவன் எவ்வளவு கெஞ்சியும் யாதொரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. இன்டர்மீடியட் பரீக்ஷை தேறிய குருசாமி வேறு வேலைகிடைக்காமல் டிரைவர் வேலைக்கு சேர்ந்திருந்தான். இப்பொழுது இவ்வேலைக்கும் கல்விழவே அவன் வேறு வேலைக்கு எங்கு போவான்?

இந்த சமயத்தில் அதே ஊரில் இருந்த மெகானிகல் இன்ஜினியர் கோபாலன் குருசாமியை மனைவி குழந்தை சகிதம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அவர்களுக்கு சாப்பாடும் துணியும் மாத்திரம் அளிப்பதாயும், சம்பளமொன்றும் கிடையாதென்றும், குருசாமி கார் ஓட்டி, துணிகள் தோய்த்துக் கடைகண்ணிக்குப் போய்வந்து இன்னும் எந்தவேலை யானாலும் செய்ய வேண்டுமென்றும், ராஜேஸ்வரி வாசல் தெளித்து கோலம் போடுவதிலிருந்து சமையல் செய்வது, முதலிய சகல வீட்டு வேலைகளையும் செய்யவேண்டுமென்றும் சொல்லியே கோபாலன் இவர்களை அழைத்து வந்திருந்தார். வீட்டிற்கு வந்ததும், "சௌந்திரம், இதோ பார் உனக்கு எவ்வளவு ஆள்களைவைத்தாலும் நீ எல்லோரையும் சண்டை போட்டு விரட்டிவிட்டு பிறகு, 'பெரிய இன்ஜினியராம், இன்ஜினி

யர். வீட்டு வேலைக்கு ஒரு ஆளைப் பார்த்துவைக்கக்கூட துப்பில்லை;' என்று என்மீது எறிந்துவிழுகிறாயே! இன்று இரண்டு வேலையாட்களை தம்பதிகளாகவே பார்த்து அழைத்து வந்திருக்கிறேன். அவர்களுக்குச் சாப்பாடும் துணியும் கொடுத்தால் போதும். சம்பளம் ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை. அவர்களும் நம்ம ஜாதிக்காரரே யாகையால் உன் ஆசாரத்திற்கும் சரியாயிருக்கும். எல்லா வேலையையும் இந்த அம்மாளையே செய்யச்சொல்லு," என்றார் கோபாலன் தன் மனைவியிடம். இதைக்கேட்ட சௌந்திரத்திற்கு ரொம்பவும் சந்தோஷமாயிற்று. உள்ளேயிருந்து வாசல் வராண்டாவிற்கு வந்து தங்கள் வீட்டிற்கு வந்திருக்கும் புதிய ஆள்களை நோக்கினாள். குருசாமியைப் பார்த்து, "உன்பெயரென்ன?" என்றாள். குருசாமியின் பெயர் தெரிந்தவுடன், "ஹோ! ஹோ! குரு வேறு சாமி வேறு; டிரைவராயிருப்பவன் பெயரைப் பார், பெயரை! நான் ஒன்றும் உன்னைக் குருவாகவும் சுவாமியாகவும் கொண்டாட மாட்டேன். டிரைவர் என்று தான் கூப்பிடுவேன். இஷ்டமுண்டானால் இரு இல்லாவிட்டால் போய்விடு," என்றாள் சௌந்திரம். ராஜேஸ்வரியின் பெயரைக்கேட்டு அவள் வைத்துக்கொண்டிருந்த குழந்தையையும் பார்த்த சௌந்திரத்திற்குச் சொல்ல முடியாத கோபம் உண்டாயிற்று. அடேயப்பா! ராஜேச்வரியா! பயமாயிருக்கே! ஆம்படையான் குருசாமி! பெண்டாட்டி ராஜ ஈஸ்வரி! போதாதற்கு குழந்தை வேறு. நான் உன்னை ராஜேஸ்வரியென்று கோவிலாழ்வாரில் உட்கார்த்தி வைத்து பூஜைசெய்வேனென்று நினைத்தாயோ! அந்த குழந்தையை வைத்துக்கொண்டு நீ என்னவேலை செய்யப்போகிறாய்! அதெல்லாம் இங்கு சரிபடாது, போய் விடுங்கள்," என்றாள் சௌந்திரம்.

ஏழைத்தம்பதிகள் என்ன செய்வார்கள். தயவு செய்து தங்களை எப்படியாவது வேலைக்கு வைத்துக் கொள்ளும்படியும், குழந்தையால் வேலைக்குத் தொந்திரவு யிராதென்றும், ஒருவாரம் பார்த்த பிறகு தங்கள்வேலை திருப்தி யில்லாவிட்டால் தங்களை அனுப்பிவிடலாமென்றும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். சௌந்திரம் குருசாமியை டிரைவர் என்றும் ராஜேஸ்வரியை ராஜி

யென்றும் கூப்பிடுவதாய் சொன்னாள். "அப்படியே ஆகட்டும், மாமீ," என்றாள் ராஜி.

'மாமீ' என்பதைக்கேட்ட சௌந்திரம் ஒருதுள்ளு துள்ளி, "என்ன! என்ன! மாமியா? வீட்டில் வேலை செய்ய வந்திருக்கும் வேலைக்காரிக்கு நான் அம்மாமியா யிருக்கவேண்டுமோ? நீ இங்கு எனக்கு மருமகளாக யிருக்க வந்துட்டாயோ? அந்த செல்லமெல்லாம் இந்தாத்தில் சரிபடாது-மாமியாம் மாமி! நாக்கை அடக்கிப்பேசு. நீ என்னை 'அம்மா' என்று வேலைக்காரியாய் லக்ஷண மாய் கூப்பிட்டுக்கொண்டு எனக்கு அடங்கி ஒடுங்கி இருக்க வேண்டும்," என்று உத்தரவிட்டு தங்களகத்தில் வேலை செய்ய அனுமதியளித்து, தங்காத்து ஷெட்டுக்குப் பக்கத்திலிருந்த ஈசம்பாய் ரூமை குருசாமி தம்பதிகளுக்கு வாஸஸ்தலமாகக் கொடுத்தாள்.

சௌந்திரத்தின் பேச்சைக் கேட்ட தம்பதிகளுக் குண்டான விசனம் எவ்வளவென்று சொல்லமுடியாது. தங்களுக்கு விடப்பட்ட ரூமைப் பார்த்து விம்மி விம்மி அழுதார்கள். ஆனால் என்ன செய்வது; தங்கள் வயிற் றுப் பாட்டிற்காகவும், அந்த சிறு கண்மணிக்காகவும் எந்த மாதிரி கஷ்டத்தையும் சகித்தேயாகவேண்டு மல் லவா? தலையில் இப்படி எழுதியிருக்கையில் அதை அனு பவியாமல் விடுமா? என்று தாங்களே சமாதானப் படுத் திக்கொண்டார்கள். சௌந்தரத்தின் வீட்டில் சமையல் கட்டு கீழும் தம்பதிகள் வசிப்பது மாடியிலும். இதனால் குருசாமி தம்பதிகளுக்கு மாடி ஏறி இறங்குவதில் கால்கள் கட்டை விட்டுப் போகும். சௌந்திரத்திற்குக் குழந்தைக ளில்லை. வீட்டில் அவர்களிருவரே யானாலும், அடிக்கடி விருந்தாளிகள் வந்து போய்க்கொண்டிருந்த படியால் ராஜேஸ்வரிக்குச் சமையல் வேலை யொன்றே போதும் போதும் என்றாகிவிடும். போதாததற்கு சௌந்திரத்தின் வசைகளைக் கேட்பதில் அவளுக்கு பாதி ஜீவனே போய் விடுகிற மாதிரி தோன்றும்.

சௌந்திரத்திற்கோ ஜம்பம், கர்வம், அஹங்காரம், இவைகளெல்லாம் வெகு அதிகம். தங்கள் வீட்டிற்கு வேலைக்கென்று வந்திருப்பவர்களும் மனுஷர்கள்தான்

என்பதை அவள் மறந்தே விட்டாள். கேவலம் நாயை விட மோசமாய் அவர்களை நடத்துவாள். வீட்டு எஜமானர்களான தங்களுக்கு முதல்தரமான அரிசி: வேலைக்கு வந்தவர்களுக்கு மட்டரகம். இது போதாதா என்ன அவர்களுக்கு என்பது அவள் அபிப்பிராயம். காபி பக்ஷணமெல்லாம் அவர்களுக்கு அனாவசியம். ஆகவே, குருசாமி தம்பதிகள் இரண்டு வேளை மட்ட அரிசி சோற்றுக்காக அந்த வீட்டில் உழைத்து வந்தார்கள்.

தினம் காலையி லெழுந்தவுடன் அன்றன்றைக்கு வேண்டிய, சமையல், பக்ஷணம், காபி முதலியவைகளுக்கான சாமான்களை அளந்து கொடுப்பது சௌந்திரத்தின் வேலை. கறிகாய்களை ராஜேஸ்வரி நறுக்கியபின்தான் சௌந்திரம் எண்ணிப் பார்த்துக் கொள்ளுவாள். துரதிருஷ்ட வசமாய் தான்கள் அதிகம் வெந்ததினால் ஒன்றிரண்டு கரைந்து போய் விட்டிருந்தால், அந்த இரண்டு தான்களைத் தமக்கில்லாமல் ராஜி தின்று விட்டதாக எண்ணி ராஜி பாட்டை ஹரோ ஹரா வென்றாக்கிவிடுவாள். இப்படியாக குருசாமி தம்பதிகளின் ஜீவனம் சில மாதம் நடந்தது.

இதற்குள் குழந்தை உமாவுக்கு நன்றாய்த் தவழ்ந்து மாடிப்படி ஏற பழக்கமாகி விட்டது. குழந்தை மாடி ஏறி சௌந்திரத்தினிடம் போய் அவள் கால்களைக் கட்டிக் கொண்டு தனது மழலைச் சொற்களில் ஏதேதோ பேசும். முதல் இரண்டொரு தினங்கள் இந்தப் பேச்சு சௌந்திரத்திற்கு ரொம்பவும் வெறுப்பா யிருந்தது. இதற்காக ராஜேஸ்வரியைக் கோபித்துக் கொண்டாள். ஆனால் மூன்றாவது நாளிலிருந்து அவளை யறியாமல் அவளுக்கு அக்குழந்தையின் மீது அன்பு பிறந்துவிட்டது. குழந்தை வருவதையே ஆவலுடன் எதிர் பார்த்திருந்து அது வந்தவுடன் அதை யெடுத்து அணைத்துக் கொண்டு கொஞ்சுவாள். ஆனால் இப்படி செய்வது பிறருக்குத் தெரியாதபடி கதவுகளை நன்றாய் அடைத்துவிட்ட பிறகு தான் செய்வாள். ஏனெனில் பெரிய இன்ஜினியர் பெண்டாட்டியாகிய தான் கேவலம் தன் வீட்டு வேலையாட்களின் குழந்தையை எடுத்துக் கொஞ்சுவதைப் பிறர் கண்டால் தனக்கு அவமானம் என்னும் பயம் சௌந்திரத்

திற்கு. தவிர தம் குழந்தையை எஜமானி அம்மாள் எடுத்து கொஞ்சுவதைக் கண்டால் தன்னிடம் குருசாமி தம்பதிகளுக்கு மரியாதை குறைந்துவிடுமென்று அவள் எண்ணினாள். ஆகவே சௌந்திரம் சமையல் கட்டிலிருக்கும் பொழுது ராஜியிட மிருக்கும் குழந்தை இவளிடம் வருவதற்கு எவ்வளவோ பாடுபட்டாலும்கூட, ராஜி எதிரில் மறந்துங்கூட குழந்தையைத் தொடவு மாட்டாள்.

அன்றைய தினம் குழந்தையை எடுத்துக் கொண்டதும், குழந்தையின் உடம்பு கதகதப்பாக யிருப்பதைக் கவனித்த சௌந்திரத்திற்குக் கவலை யுண்டாயிற்று. ஆனால் பரிகாரம் ஒன்றும் செய்யாமலிருந்து விட்டாள். கோபாலன் வேலை காரணமாய் வெளியூருக்குப் போயிருந்ததால் மாடியில் தனியாகப் படுத்துக் கொண்டிருந்த சௌந்திரத்திற்கு இரவு ஒரு மணியான பின்னும் தூக்கமே வரவில்லை. அவளுக்கு குழந்தைக்கு உடம்பு எப்படி இருக்கிறதோ என்னவோ என்கிற எண்ணம் தோன்றிய வுடனே படுக்கையை விட்டு எழுந்து போய் வராண்டாவில் நின்று கொண்டு குருசாமியின் அறையை கவனித்துப் பார்த்தாள். அங்கு இன்னும் விளக்கெரிவதைக் கண்டு வழக்கத்திற்கே விரோதமாக "குருசாமி" என்று பெரிய பேரால் ஆனால் அன்புடன் கூப்பிட்டாள். எஜமானியம்மாள் கூப்பிடுவதைக் கேட்டு குருசாமி வேகமாய் ஓடிவந்தான். "ஒரு மணி ராத்திரியானாலும் ஏன் இன்னும் விளக்கை எரிய விடுகிறீர்கள்? இன்னும் படுத்துக் கொள்ளவில்லையா? ராஜேஸ்வரி எங்கே?" என்றெல்லாம் கேட்டாள் சௌந்திரம்.

"குழந்தைக்கு உடம்பு சரியாயில்லை யாகையால் இருவரும் அதைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறோம். ராஜேஸ்வரி குழந்தையை மடியில் படுக்க வைத்துக் கொண்டிருக்கிறாள். அதற்கு அசாத்திய ஜுரமாயிருக்கிறது," என்றான் குருசாமி. இதைக்கேட்ட சௌந்திரம் தன் பெரிய மனுஷ்ய தனமெல்லா வற்றையும் மறந்தவளாய் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து குருசாமியின் அறைக்குள் நுழைந்தாள். "ஏன்! ராஜேஸ்வரி, குழந்தைக்கு உடம்பு சரியில்லா விட்டால் என்னிடம் சொல்

லப்படாதா? வியாதியாயிருக்கும் குழந்தையை இந்தப் பேய்க்காற்றில் இந்த ஈச்சம்பாய் உள்ளில் வைத்துக் கொண்டிருந்தால் அதன் கதி என்ன வாகிறது? எழுந்திருந்து வா என் ரூமிற்கு," என்று சொல்லி ராஜேஸ்வரியின் மடியில் படுத்திருந்த குழந்தையைத் தானே எடுத்துக் கொண்டு வந்து மாடியில் தன் ரூமில் தன் படுக்கையில் குழந்தையைப் படுக்க வைத்தாள். "குருசாமி! வெறுமனே நிற்காதே! சீக்கிரம்போய் டாக்டரை அழைத்துவா," என்றாள். குருசாமி சிறிது நேரத்தில் டாக்டரை அழைத்து வந்தான்.

குழந்தையைப் பரிசோதித்த டாக்டர், "குழந்தைக்கு டபில் நிமோனியா ஜுரம் வந்திருக்கிறது. இதற்கு தகுந்த மருந்து என்னிடமில்லை. இந்த ஊரிலும் அகப்படாது. சீட்டு எழுதிக் கொடுக்கிறேன். மூன்று மணி சாவகாசத்திற்குள் இம் மருந்தை கொடுத்தால்தான் குழந்தை பிழைக்கும் இல்லாவிட்டால் கஷ்டம்," என்று சொல்லிவிட்டுச் சென்றார். செய்வதென்ன வென்றறியாமல் மலைத்துப்போய் நின்றார்கள் குருசாமியும் ராஜேஸ்வரியும்.

"என்ன! குருசாமி! சும்மா நின்றுகொண்டிருந்தால் குழந்தை பிழைக்கும் வழி எப்படி? உங்கள் போன்றவர்களுக்கு பகவான் எதற்காக குழந்தையைக் கொடுத்தானோ தெரியவில்லை. மீனம் மேஷம் பார்க்காமல் சீக்கிரம் புறப்படு. நம்ம காரையே எடுத்துக் கொண்டு மைசூருக்குப் போய் முதலில் மருந்தை வாங்கிக் கொண்டு அங்குள்ள பெரிய டாக்டரையும் அழைத்து வா. இந்தா! சாவி! என் இரும்புப் பெட்டியைத் திறந்து அதிலிருக்கும் பணத்தை யெல்லாம் எடுத்துக் கொண்டு போ, முதலிலேயே பீஸ் கொடுக்காவிட்டால் டாக்டர் வரமாட்டேன் என்பாரோ என்னவோ. நூறு ரூபாய் பீஸானாலும் கவலையில்லை. கொடுத்து அழைத்து வா!" என்றாள் சௌந்திரம்.

அவள் பெட்டியைத் திறக்கும்பொழுது அருகிலிருந்தால்கூட கோபித்துக்கொள்ளும் சௌந்திரம் சாவியையே தன்னிடம் கொடுத்ததைக் கண்டு குருசாமி ஆச்

சரியத்தில் பிரமித்து நின்ருன். இப்படி காலதாமத மாவதைச் சகிக்காமல் சௌந்திரம் "குருசாமி! புண் ணியமுண்டு! தயவுசெய்து சீக்கிரம் ஆகவேண்டியதை செய்யப்பா! நான் இனி உங்களை கோபித்துக் கொள்ள மாட்டேன்," என்று ரொம்பவும் மன்ருடி வேண்டினுள். இதன் பிறகுதான் சௌந்திரம் உண்மையாகவே பேசு கிருளென்று அறிந்து 20 மைல் தூரத்திலிருக்கும் மை சூருக்குக் காரில் குருசாமி புறப்பட்டுப் போனுன். மருந் தையும் வாங்கிக் கொண்டு 25 ரூபாய் பீஸ் கொடுத்து பெரிய டாக்டரையும், இரண்டு மணி நேரத்திற்குள் அழைத்து வந்து சேர்த்தான் குருசாமி. பகவான் கிருபை யால் சரியான காலத்திற்குள் மருந்து கொடுத்ததால் குழந்தை பிழைத்துக் கொண்டது. குழந்தை உடம்பு தேவலையாகும்வரை சௌந்திரமே குழந்தையருகிலிருந்து கொண்டு வேளைக்குச் சரியாக ஆகாராதிகளையும், மருந் தையும் கொடுத்து குழந்தையை வெகு ஜாக்கிரதையுடன் கவனித்துக் கொண்டாள். இப்பொழுது ராஜேஸ்வரி யைத் தன் சகோதரியாகவே நினைத்து வேலை யொன்றும் செய்யவிடாமல் அவளை தன்னுடனேயே வைத்துக்கொண் டாள். குருசாமிக்கு 50 ரூபாய் சம்பளத்தில் வேலை செய் வித்து கொடுத்தார் கோபாலன். குழந்தை உமாவின் காரணமாய் அவளைப் பெற்றவர்களுக்கு நல்ல காலமும், சௌந்திரத்திற்கு நல்ல புத்தியும் ஏற்பட்டது. அதன் பிறகு சௌந்திரம் ஆள்களைப் படுத்தாமல் பிரியத்துடன் நடத்த ஆரம்பித்தாள். ஏழை எளியவர்களுக்கு தகுந்த உபகாரம் செய்தாள். பழைய சௌந்திரம் மாறிப் போய் புதிய சௌந்திரமானுள்.

முதல் குயவன்

"ஸ்ரீரா"

மானிட சமூகம் முதல் குயவனுக்கு மிகவும் பெரிய நன்றிக் கடன் பட்டிருக்கிறது! அவனுக்கும் முன்னே, மிகப் பழைய காலங்களில், காய்ச்சும் முறை இப்போதுபோல அவ்வளவு சுலபமாக இல்லை; இருந்திருக்க முடியாது! இதற்கு சரித்திரமே சான்று.

புராதன மனிதன் தனது மாமிசத்தைப் பக்குவம் செய்வதற்கு மிக வேடிக்கையான முறையைக் கையாண்டான். உதாரணமாக: ஒரு ஆற்றின் கரையோரமாக சிறு ஊற்றைத் தோண்டி, பெரிய நெருப்பு ஜ்வாலையில் பழுக்கக் காய்ந்த இரும்பை அந்த ஊற்றிற்குள் போட்டு, ஜலத்தைக் கொதிக்க வைப்பான்; பிறகு அதில் தான் கொண்டுவந்த மாமிசத்தைப் போட்டு, அரை குறையாக வெந்தபின் அதை எடுத்து ஆகாரமாகக் கொள்வான். இதைப் பார்த்தால் நமக்கு வேடிக்கையாகத் தோற்றலாம். ஆனால் புராதான மனிதனுக்கே இதைத் தவிர வேறொரு வழியும் தோன்றவில்லை. காலப் போக்கில், காய்ச்சும் முறையில் நவீனம், அதனுடன் கலந்த சுலபம், இரண்டும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

* * * *

மிகப் பழைய காலத்தில் வெங்கலப் பாத்திரமோ, வெள்ளிப் பாத்திரமோ, கண்ணாடி டம்ளரோ ஒன்றும் கிடையாது. ஆனால், புராதன மனிதன் அவைகளின்றி வாழ்க்கை நடத்தாமல் போகவில்லை. கொட்டாங்கச்சிகளும், மாட்டுக் கொப்பும், இறந்தவனது உலர்ந்த மண்டையோடும், மூங்கிற் குழாயும் அவனுக்குப் பாத்திரங்களாக உபயோகப்பட்டன.

ஆரியர்கள் ஒரு போரில் வெற்றிபெற்றபின், அவ் வெற்றியைக் கொண்டாடுவதற்காக, இறந்த எதிரியின்

மண்டை ஓட்டில் ஸோம ரஸத்தை ஊற்றிக் குடிப்பார்களாம்!

ஆரியர்களுக்குக் கல்லில் பாத்திரங்கள் செய்யத் தெரியும். அதனால் தங்களது ஆகாரத்தைப் பதனிட அவர்கள் கற்கலயங்களை உபயோகித்தார்கள். இது ஒரு படி முன்னேற்றம்.

திடீரென்று ஒருநாள் சூரியன் உதித்தது! காக்கைகள் கரைந்தன! முதற் குயவன் தோன்றினான்! அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று—புதிய யோசனை! அவன் என்ன செய்தான் தெரியுமா? ஒரு கொட்டாங்கச்சியையோ, அல்லது இன்னம் பெரிய பழத்தின் கெட்டியான ஓட்டையோ எடுத்து, அதன் பேரில் மண்ணை இலேசாகப் பூசி நெருப்பில் வைத்துக் காய்ச்சினான். களிமண் நெருப்புப் பற்றிக்கொண்டு எரியவில்லை! அதனால் உள்ளிருந்த கொட்டாங்கச்சி அப்படியே இருந்தது!—இது நம்முடைய ஊகம்...நல்ல ஊகம்தான்!

புராதன மனிதனுக்கு இவ்வளவு ஆற்றல் இருந்திருக்க முடியுமா என்று ஒரு சந்தேகம். அவன் இப்புது முறையைக் கண்டு பிடித்தது ஆற்றலின் மூலம் அல்ல; வேறு வழியில்லாமல் புதுமையின் மேல் தடுக்கி விழுந்தான்! கல்லினால் செய்த பாத்திரம் இல்லாது ஒருநாள் தவித்துப் போய்விட்டான். இன்றைக்கு வயிற்றில் மண் தான் என்றிருந்தபோது இந்த யோசனை தோன்றிற்று... நல்லதாய் போய்விட்டது!

காரியம் முடிந்தபின் அவன் நெருப்பிலிருந்து பாத்திரத்தை எடுத்தான். பார்த்தான்...இல்லை, இல்லை...அது கண்ணில்பட்டது! ஒரு விநோதமான மாறுதல் ஏற்பட்டிருந்தது. முதலில் கொழ கொழவென்று, பழுப்பாக இருந்த மண்பூச்சு கெட்டியடைந்து, சிகப்பாக அனலினின்று வெளிவந்து விட்டது! அவனுக்கு ஆச்சரியம் தாளவில்லை.

உண்மையாக அதே மாதிரிதான் நடந்ததா? ஆம்... இது மாதிரிதான் ஏதாவதொன்று நடந்திருக்க வேண்டும்.

* * * *

உலகத்தின் வெவ்வேறு பாகங்களில், வெவ்வேறு சமயங்களில் மண் கலயம் செய்வது என்ற புதிய ஆற்றல் தோன்றியிருக்க வேண்டும்; ஏனெனில் அந்தக் காலத்தில் போக்கு வரவு சாதனங்கள் கிடையாதல்லவா? ஒரு தேசத்தாரிடமிருந்து மற்றொரு நாட்டார் தெரிந்து கொள்வது என்பது மிகவும் அரிது!

கிராண்ட் ஆலன் (Grant Allen) என்ற ஆங்கிலக் கட்டுரையாளர் சரித்திர ஆராய்ச்சிகளினின்று சில குறிப்புகள் கொடுக்கிறார். அவை பின்வருமாறு:—

"மிகப் பழைய காலத்தில் அமெரிக்காவில் மிஸ்ஸிஸிப்பி நதியின் பள்ளத்தாக்குகளில் மண் கலயம் செய்யும் ஆற்றல் முதிர்ந்திருந்தது—இது சுமார் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் இருந்திருக்கலாம்.

மெக்ஸிகோவில் அதே காலத்தில் மண் கலயங்களுக்கு உருவங்கள் உண்டாக்க பற்பல விதமான ஓடுகள் உபயோகப்படுத்தப் பட்டன.

பிஜி தீவிலும், ஆப்பிரிக்காவின் பற்பல பாகங்களிலும் பற்பல ஓடுகளின் உருவங்களில் மண் கலயங்கள் இன்னும் உபயோகத்தில் இருந்து வருகின்றன.

அழகைப் பழித்த அலெக்ஸாண்ட்ரியா நகரத்துப் பெண் கிளியோபாத்திரை (Cleopatra) தன் காதலனை ஸீஸருக்கு (Caesar) ரோஜாப் பூக்களின் உருவங்களினால் சித்தரிக்கப்பட்ட அழகிய மண் பாண்டத்தில் மதுவை ஊற்றிக் கொடுத்தாள். அந்தக் கலயம் இப்போது பாரீசகத்தில் வஸ்து சாலை யொன்றில் இருக்கிறது."

அங்கே யெல்லாம் போவானேன்? இந்தியாவில் தான் பாண்டக் கலை மிகப் புராதன காலம் முதல் இந்நாள் வரையில் துரிதமாகப் பெருகி வளர்ந்திருக்கிறது. சீன மத்திய காலத்துச் சரித்திரத்திலே பெரிய கலைகளில் முக்கியமானதாகக் கருதப்பட்டது பாண்டக் கலை என்று சொல்லப்படுகிறது. புதிய வேலைப்பாடுகளுடன் பாண்டங்கள் செய்வதில் பரிசுப் போட்டிகள்கூட சீனாவில் உண்டாம்!

இதெல்லாம் குயவனது சக்கரம் கண்டுபிடிக்கப் படாத நாட்களில் நடந்தவை என்பதை மனதில் வைத்துப் பார்த்தால் இதன் முக்கியத்வம் நன்கு விளங்கும்.

* * * *

அப்படிப் பட்ட நூதனத்தைக் கண்டுபிடித்த முதல் குயவன் யார், எப்பொழுது இருந்தான், அவன் பெயர் என்ன, என்பவை உசிதமான கேள்விகள். மிகப் பெரிய ஆன்மாக்களை உலகம் எளிதில் மறந்து போகிறது! காலப் போக்கில் முதல் குயவனது பெயரும் எல்லோருக்கும் மறந்து போயிருக்க வேண்டும்!

பாண்டக் கலையைக் கண்டு பிடித்தவன் ஒருவனா, பலரா? இதுவும் சரியான கேள்விதான். ஏனெனில், பற்பலர், பற்பல விதமாக இந்த நவீனத்தின் மேல் இடறி விழுந்திருக்கலா மல்லவா?

ஆதலால், முதற் குயவனைக் கண்டு பிடிப்பதற்குப் பதிலாக மிகப் புராதனமான, முதல் முதலில் தோன்றிய பாண்டத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியது தான்!

* * * *

ஆரியர் காலத்து இந்தியப் பாண்டக் கலை மிகத் தேர்ச்சி பெற்ற கிளையைச் சேர்ந்தது. அதற்கப்புறம் இன்னும் முதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. இன்னும்கூட நாம் எண்ணிக்கையற்ற பாண்டங்களை உபயோகிக்கிறோம். இஷ்டப்படி யெல்லாம் வேலைப்பாடுகள் செய்கிறோம், பாண்டங்களின் மேல் புதிய புதிய கோலங்கள் வரையப் படுகின்றன. இந்தக் கலை இன்னும் முதிர்ச்சி பெற இந்தியாவில் இடமிருக்கிறது!

பாண்டக் கலையைப் பற்றி ஆராய்ச்சி செய்தவன் எவனுக்கும் களிமண் மிக்க உதவியாக இருந்திருக்கிறது! ஏனெனில் எண்ணற்ற வருஷங்கள் கடந்த பின்னும் பூமிக்கடியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட பாண்டம் தன் மேல் எழுதப்பட்ட சித்திரங்களை மறையாமல், அழியாமல் வைத்திருந்திருக்கிறது. இது மண்ணின்

மாகாத்மியம்! சித்திர வேலைப்பாடுகள் செய்த அந்த யானிடக் கரம் மண்ணோடு மண்ணாய் மடிந்துபோயிருக்கலாம். ஆனால் அதன் ஆற்றல் பாண்டத்தின் மூலம் அழியாமல் காட்சி யளிக்கிறது.

பாண்டங்களின்மேல் வேலைப்பாடுகள் செய்வது சித்திரங்கள் வரைவது இவை போன்ற காரியங்கள் யோசனையில்லாமலேயே, யதார்த்தமாகத் தோன்றியிருக்க வேண்டும். வளைந்து, ஒடுங்கி, பற்பலவாறு நெளிந்திருந்த ஓடுகளின் உதவியால் செய்யப்பட்ட பாண்டங்கள் அந்த ஓடுகளைப் போலவே இருந்திருக்க வேண்டும். இவ்வாறே சித்திரங்களெழுதும் கலை முதலில் துவக்கப்பட்டிருக்க வேண்டும்.

அறிந்து செய்யப்பட்ட சித்திரவேலைப்பாடுகள் கூட முதலில் ஏதாவதொரு முறையை யொட்டி, சிறு அளவுகளில், இயற்கையமைப்புகளைப் பார்த்து எழுதப்பட்டிருக்கவேண்டும். முதல் முதல் கைகளையே உதவியாகக் கொண்டுதான் பள்ளங்களும், கோடுகளும், உண்டாக்கப்பட்டன. பின்பு உபயோகத்திற்கு ஆயுதங்கள் தோன்றி யிருக்க வேண்டும்.

இப்பொழுது குயவனுக்கு சக்கரம் இருக்கிறது. அச்சு இருக்கிறது. மரத்திலும், இரும்பினாலும் செய்யப்பட்ட சிறுசிறு ஆயுதங்கள் இருக்கின்றன. முத்திரைகள்கூட சிலர் வைத்திருக்கிறார்கள்.

* * * *

நம் காலத்திய பாண்டக்கலை வருங்காலத்து மனிதனுக்கு அழியாமல் இருக்கத்தான் போகிறது. இந்தக் கலை இன்னும் விருத்தியடைவது, நாம் இன்னும்கூட மண்கலயங்களை உபயோகிக்கப் போகிறோமா, என்பதைப் பொறுத்திருக்கிறது.

ஆனால், சாதாரணமாக வீடுகளில் உபயோகப்படும் மண்பாத்திரங்களின் மேலெல்லாம் வேலைப்பாடுகள் ஒன்றும் செய்திருப்பதில்லை—சாதாரணமாக. தனக்கு ஒரு மாறுதலுக்காகத்தான் குயவன் புதிய புதிய அமைப்பு

களை சிருஷ்டிக்கிறான். அவனுக்கும் அலுத்துபோய் விட்டால்......!

காலமும், பண்பாடும், புதுமையும் பெருகி வரும் இக்காலத்தில் பாண்டக்கலையைப் பற்றி யார் அதிகம் கவனிக்கப்போகிறது!

பண்டைக்கலைப் பற்றியே யோசனை செய்யாத நாம் முதல் குயவனைப்பற்றி யோசனை செய்வானேன்? அவனை மறந்து விடுவோம்! குயவனையும், வேதாந்தத்தையும் கலந்து பேச நாம் கூட ஓமார் காயங்களா (Omar Khayyam) என்ன?

Hoe & Co.

General Printers
and
Specialists in Offset
POSTER PRINTS

PHONE: 3712
MADRAS

பாழ்மனை

ரா. ஸ்ரீநிவாசன்

(1)

அந்தத் தெருவழியாகச் சென்றேன். உடலில் ஏதோ ஓர் கூச்சமெடுத்தது. போவோர், வருவோரை யெல்லாம் வெறும் கண்ணசைப்பால் கொக்கி போட்டிழுக்கும் தாசிகளின் தெரு என்ற எண்ணமே என் கூச்சத்திற்கு காரணம். ஆயிரக்கணக்கான குடும்பப்பெண்களின் இருதயத்தைக் கசக்கி, அவர்கள் அங்கே கண்ணீர் வடித்து அழ, இங்கு இம் மின்மினிகளின் கண்டத்தினின்று எழும் இன்பத்தொனியைக் கேட்க வருகிறார்கள் பலர். கணக்கற்ற பெண்மணிகளின் ரத்தக்கண்ணீரில் குழைத்து கட்டப்பட்டது போன்ற சிவப்புக் கட்டிடங்கள் பிரமாண்டமாக எழுந்து நின்றன அத்தெருவில். 'இத்தகைய ஒரு சமூகமுமல்லவா நம் நாட்டிலிருக்கிறது; இந்த சமூகத்தினிடமுல்லவா அரும் பெரும் கலைகள் சிக்கிக் கொண்டிருக்கின்றன' என்று எண்ணும் போதே உள்ளம் விரிந்து வெடிக்கும் போன்றிருக்கிறது. அலங்காரமான கட்டிடங்கள்; ஜோதி நிறைந்து இருந்தது ஒவ்வொரு வீட்டிலும். ஆனால் அவைகளுக்கு திருஷ்டி பரிகாரமாகத்தானோ என்னவோ நடுவில் ஒரு பாழ்மனையொன்று தென்பட்டது. வீட்டின் முன்கட்டு முழுவதும் சரிந்து கிடந்தது. செல்லரிக்கப்பட்டு இந்திரன் கண்கள் போன்ற கதவு கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருந்தது. ஆனால் பின் பக்கத்தில் மாத்திரம் யாருடைய புண்யத்திற்கோ கூரை கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருந்தது. 'அந்த வீட்டில்போய் யார் இருக்கப் போகிறார்கள்' என்று நினைத்தேன். ஆனால் மறுநாள் இரவில் அவ்வீதி வழியாய் சென்றபோது வாசலில் ஒரு அகல் விளக்கு 'மினுக் மினுக்' என்று எரிந்து கொண்டிருந்தது.

(2)

மறுநாள் என் மனதில் படர்ந்த சந்தேகத்திரை நீங்

கியது. வாசலில் ஒட்டிக்கொண்டிருந்த கதவு நன்ருகத் திறந்திருந்தது. உள்ளே இருப்பதையெல்லாம் நன்ருகப் பார்த்தேன். உண்மையில் அந்தப்பாழ்மனையில் அத்தகைய ஓர் அழகுத்தெய்வம் இருக்குமென்று கனவில் கூட நினைத்திருக்க மாட்டேன். ஆம்! முல்லைக் கொடி போன்ற நெளிவு தாங்கிய ஓர் பெண்ணுருவம் அங்கு மிங்கும் ஆடிக் கொண்டிருந்ததை இதே கண்ணுல் தான் பார்த்தேன். ஏன்? அவள் தளிர்முகத்தைக்கூட நன்ருகப் பார்த்தேன். நிலவைப் பழிக்கும் லாவண்யம் இழைந்திருந்தது அவள் முகத்தில். ஆனுல் அதில் சோகத்தின் ரேகை படர்ந்திருந்தது. அவளுடன் ஒரு வாலிபன் வேறு அங்கிருந்தான். களை பொங்கும் இனியமுகம்; கட்டுமஸ்தான வைரம் பாய்ந்த தேகம்; சுருள் சுருளாய் அலை போன்று படிந்திருந்த தலைமயிர்; ஏன்? கண்களிலும் அசாத்திய தீக்ஷண்யம் இருந்தது. ஆனுல்......ஏதோ சித்தப்பிரமை பிடித்தவன் போன்று அர்த்தமற்ற அவனது சில செய்கைகள் கண்டு திடுக்கிட்டேன். சின்னக்குழந்தையைப் போன்று திடீரென்று குதித்து ஓடுவதும், சிதறி கிடந்த கற்களை யெடுத்து எறிவதும், தூணில்போய் தலையை மோதிக் கொள்வதும் ஆகிய பல செய்கைகள் எனக்கு அதிர்ச்சியைக் கொடுத்தன. அதன் காரணத்தை என்னுல் ஊகிக்க முடியவில்லை. முகத்திலோ ராஜகளை சொட்டுகிறது. 'ஏன் இப்படி செய்கிருர்' என்று எனக்குள்ளேயே கேள்வி போட்டுக் கொண்டேன். பதில் பலரகமாயிருந்தது. அவைகளால் என் மனது திருப்தியடையவில்லை. நினைக்க நினைக்க விசித்திரமாயிருந்தது. 'இடிந்து சரிந்த அவ்வீட்டில் அவ்வழகுருவம் ஏன் வசிக்க வேண்டும்? அவ்விளைஞன் யார்? அவனுக்கு நேர்ந்த விபத்து என்ன?' என்ற சந்தேகங்களால் என்மூளை குழம்பியது.

(3)

என் சந்தேகத்தை விளக்க அந்தக்கிழவர் வருவார் என்று நான் எதிர்பார்க்கவே யில்லை. சோகம் தோய்ந்த கண்கள்; பழுத்துச் சுருங்கிய தோல்கள்; உடலிலோ எப்போதும் ஒரு நடுக்கம். "என்னதம்பி! இடிஞ்ச

வீட்டை பாக்கிறீயா? எங்க வீடுதான் தம்பி அது! எங்க வீடுதான்! நீ சந்தேகப்படறதெல்லாம் எனக்கு நல்லா தெரியுது தம்பி. இங்கே வா! அப்படி மாந்தோப்பு பக்கம் போவலாம். எல்லாம் சொல்றேன் வா" என்று நடுங்கிய கைகளை என் தோள்மீது போட்டுக்கொண்டே நடந்து சென்ருர். மாந்தோப்பும் வந்தது, அவரும் சொல்லத் தொடங்கினர்.

"அப்பா இந்த வயதான காலத்தில் மனநிம்மதி யோடே சாகாமல் துடிதுடித்துக் கொண்டிருக்கிறேன். அந்தத் தங்கக்கொடியின் வாழ்க்கையில் ஈரமண்ணைப் போட்ட படுபாவி நான். என்னை சித்திரவதை செய்தா லும் தகும். இளம் காதலர்களின் இனிய பிணைப்பை 'வெடுக்கென' அறுத்தெறிந்தேன் அன்று. இன்று அப்படியே என் இருதயம் கசங்குகிறது. நீ பார்த்தாயே அந்தப் பொன்னுருவம் அவள்தான் என் தங்கச்சி பெண். பரம்பரையாய் நடக்கும் எங்கள் தாசித் தொழிலை சமூ கம் எப்படி வெறுக்கிறது என்பது உனக்கு தெரியும். என் தங்கச்சிக்கு இந்த தொழிலை நடத்த துளிக்கூட இஷ்டமேயில்லை. ஒவ்வொரு சமயம் அவள் கண்ணி லிருந்து ரத்தம் கூட ஒழுகும். எப்படியோ அவள் கால மும் கடந்து விட்டது. அந்த இரவுக்காட்சி அப்படியே கண்முன் வருகிறதப்பா! 'தங்கச்சிக்கு மேல்மூச்சு வாங்குகிறது. கண்ணெல்லாம் சுழன்று சுழன்று வரு கிறது; பக்கத்திலிருந்த தீபம்வேறு 'படபட' வென்று அடித்துக்கொள்கிறது' அப்போதுதான் என்னை அழைத்து தங்கத்தின் கையை எனதுடன் பிணைத்து "அண்ணச்சி; விளக்கு மேலே சத்தியமா தங்கத்தை இந்த தொழில்லே விடறதில்லேன்னு சொல்லுங்கோ அண்ணச்சி" என்று உறுதி மொழிகேட்டாள். நான் வாய்திறந்து உறுதி கூறவில்லை. அதற்குள்தான் அவள் ஆவி கண்வழியாய் அகன்று விட்டதே! என் உறுதிமொழிக்கு காத்திருந்தா ளல்லவா? தங்கத்திற்கு என்னைத்தவிற வேறு ஆதரவே கிடையாது. என்னிடம் உயிரை வைத்திருந்தாள். பாவம்! அவள்தான் இத்தொழிலை எவ்வளவு வெறுத் தாள் தெரியுமா? பாவாடை கட்டி, ஊர் பிள்ளைகளோடு தெரு மணலில் கிளிக்கூடுகட்டி விளையாடுவாள். குழந்தை

யோடு குழந்தையாய் குதூகலமாய் குதித்துக் கொண்டிருப்பாள். அதற்குள் யாராவது வந்து, 'அந்த தேவடியா பெண்ணோடே என்னடி விளையாட்டு?' என்று சொல்லிக் கொண்டே மற்ற குழந்தைகளையெல்லாம் விரட்டி விடுவார்கள். தங்கத்திற்கு அசாத்திய உணர்ச்சி உண்டு. அம்மாவிடம் ஓடி முகம் புதைத்து விக்குவாள். இளம் வயது முதற்கொண்டு அவள் நெஞ்சில் ஊறியிருந்த வெறுப்பு வயது வந்தவுடன் கரைகடந்து போயிற்று. 'என் மூச்சு என் உடலில் இருக்கும் வரையில் என்னை 'வேசி' என்று அணைய முடியாது. வேண்டுமானல் என்உயிரை அகற்றி விட்டு பிறகு அணையட்டும்'' என்று அவள் ஆவேசக் குரலில் சொல்லும்போது நான் அப்படியே அதிர்ந்து விடுவேன். ஆனல் என் பாதகநெஞ்சில் அந்த நப்பாசை விடவேயில்லை. நான் அவளை வற்புறுத்தவே மாட்டேன். அவள் தாய் கேட்ட வாக்குறுதியை நிறைவேற்றியிருப்பேன். ஆனல் என் நிலைமை மிகவும் மோசமாயிருந்தது. எனக்கு கடன் 4000 ரூபாய் வரையிருந்தது. பண வருவாய்க்கு வேறுவழியேயில்லை. 'தங்கத்தை விட்டால் வேறு வழியேயில்லை. ஆதலால் அவளை எவ்விதமாவது வற்புறுத்திப் பார்க்க வேண்டுமென்ற கொடிய எண்ணம் நெஞ்சில் படர்ந்தது. ''என்தேகத்தை விற்று ஒரு செப்பு காசுகூட கொடுக்கமாட்டேன்'' என்றுசொல்லி விட்டாள் தங்கம். அவள் பிடிவாதம் எனக்கு அடக்க முடியாத வெறுப்பை யளித்தது. எப்படியாவது அவள் என் வார்த்தைக்கு கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும் என்ற கனவு உலகத்தில் இருந்து வந்தேன். அவள் வைராக்கியத்தை அன்று உணரவில்லை.

(4)

அப்போதுதான் இந்தக் கோவிலில் திருக்கல்யாண உற்சவம். 'பாலசந்திரன்' என்ற இளைஞனின் நாதஸ்வரக்கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள் அன்றைக்கு. எங்கள் ஜாதிக்குத்தான் நாதஸ்வரத் தொழில் பிரத்தியேக உரிமை' யென்பது தான் உனக்கு தெரியுமே! ஆனல் அந்தப்பையன் எங்கள் ஜாதியைச் சேர்ந்தவனேயல்ல! நல்ல உயர்ந்த குடும்பமாம். வெகு அழகாக அன்று வாசித்தான். அதனல் இங்கிருப்பவருக் கெல்லாம் அவன்

மீது பொறுமை. தங்கமும் அன்று கச்சேரிக்கு வந்திருந்தாள். ஏன் நான் வளர்த்திக்கொண்டே போகவேண்டும்? உலகத்தையே வெறுத்த தங்கத்தின் இருதயம் பாலசந்திரனுக்கு பீடம் கொடுத்து விட்டது! எப்படிதான் அவர்கள் மனம் கலந்ததோ தெரியவில்லை. இருதயம் மட்டும் கலந்ததை நான் அறிவேன். அன்று முழுவதும் தங்கம் அந்தரத்தில் பறந்தாள். அந்தபையனையும் வீட்டிற்கு அடைந்து விட்டாள். இத்தனை நாள் வாடிவதங்கிய மலர் போன்ற அவள் வதனம் அபூர்வ எழிலுடன் புத்துணர்ச்சி பெற்று மலர்ந்து விரிந்தது. ஆனால் என் கழுகுக் கண்ணிற்கு அவ்விருவரையும் ஒருமித்துப்பார்க்கப் பொறுக்கவே யில்லை. எப்படியாவது அவ்விருவரையும் பிரித்துவிடவேண்டு மென்ற கொடிய எண்ணம் நெஞ்சில் பாய்ந்தது. அந்தப்பையனுடன் அவள் ஒருமித்துவிட்டால் என்கதி என்ன? என் கடன் எப்படி அடையும்? பாலசந்திரனை நான் எப்படி வெறுத்தேன் தெரியுமா? செப்பாலடித்த காசுகூட இல்லையென்ற காரணம் தான் அவ்வெறுப்புக்கு காரணம். அவன் எங்கள் வீட்டில் தங்கியிருந்த இரண்டு நாட்களும் இரண்டு யுகங்களாயிருந்தன. 'அவன் ஒழிய மாட்டானா' என்ற நினைப்பிலேயே யிருந்து வந்தேன். நல்ல காலம்! அவனும் விடைபெற்றுச் சென்றுவிட்டான். தங்கத்தின் விம்மலும் அவனைத்தொடர்ந்தது. இன்னும் ஒரு மாதத்திற்குள் வந்து அழைத்துப் போகிறேன்' என்ற வாக்குறுதியையே மூச்சாக வைத்துக் கொண்டு தங்கம் நாளை ஓட்டினாள். நாளொன்று போனால் எனக்கு 'சுரேர்' என்றிருக்கும். மாதம் கழிந்தால் அவன்வந்து என்தங்கத்தை அடித்துக் கொண்டுபோய் என்னை நடுச்சந்தியில் வைத்து விடுவானோ என்று பயந்தேன். தங்கம் அவனிடம் வைத்த அன்பு நாளுக்கு நாள் பரிணமித்துச் சென்றது. அவள் உடலிலிருந்து உயிரைப் பிரிக்கலாம்; பாலசந்திரனை பிரிக்க முடியாது' என்று எவ்வளவோமுறை சொல்லியிருக்கிறாள். அப்போதெல்லாம் என் உடல் தகிக்கும்!

(5)

அந்த சமயத்தில்தான் 1932-ம் வருஷத்து புயற்காற்று

அடித்தது. நீகூட பார்த்திருப்பாயே தம்பி அப்பா என்ன கோரம்? அமைதியை அடித்து விரட்டிவிட்டு பேய்காற்று ஊதத்தொடங்கி விட்டது. ஐயோ! எத்தனை வீடுகள் இடிந்தன! எத்தனை கால் நடைகள் சேதம்! சுழன்று, சுழன்று சுற்றியடித்த காற்று பிரம்மாண்டமான மரங்களையெல்லாம் திருகித் திருகி எறிந்தது. எங்கள் வீட்டிற்கு எதிரில் ஒரு பெரிய ஒதிய மரமிருந்தது. காற்றின் கோரத்தை எதிர்க்க அதனுல் முடியவில்லை. நானும், தங்கமும் ஒரு அறையில் பதுங்கிக்கொண்டிருந்தோம். கொல்லையில் கட்டியிருந்த மாடுகளின் கதறல் காதைக் கிழித்தது. கொட்டாய்வேறு விழுந்து விட்டது. நான் போனல் உயிரும் போய்விடும்! 'கட்டிடமே தலையில் இடிந்து விழுமோ' என்ற கிலியுடன் உயிரைக் கையில் பிடித்துக்கொண் டிருந்தோம். 'மடேர்' என்று மரம் முறியும் சப்தம் கேட்டது 'ஐயோ' என்று அலறிஞள் தங்கம். வாசல் மரம் எங்கள் வீட்டின்மேல் விழுந்து கூரையைச் சரித்துவிட்டது. அதற்கு பின் கண்ணிமைப்பிலே வீட்டுச்சுவர் 'சட சட வென்று' கீழே சரிந்தது. எங்கேயாயினும் தப்பிச் சென்று விடலா மென்ருலும் வழியில்லை. ஆண்டவனிடம உயிரைக் கொடுத்து விட்டு உடல் வெதிறிக் கொண்டிருந்தோம். ஊதல் ஓய்ந்தது. ஊரெல்லாம் அலங்கோலம். ஏன்? என் வீடே இடிந்து விட்டது. கொல்லைப்புறத்தில் இப்போது ஒட்டிக்கொண்டிருக்கிறதே அதுதான் புயலுக்கு தப்பியது. அதில்தான் நாங்கள் இப்போது இருக்கிறோம்" என்று சொல்லும் போதே பெருமூச்சு வாங்கியது கிழவருக்கு!

"இன்னும் அப்படியே இருக்கிறதே! வீட்டை பிறகு கட்டவில்லையா?" என்று நான் இடைமறித்துக் கேட்டேன்.

"எங்கே கட்டுவது? பிறகுதானே நான் செய்த பாதகம். வீடுவேறு கட்டவேண்டும்; கடன்வேறு அடைபடவேண்டும்; பணம் வேண்டும். என்ன செய்வது? இன்னும் சில நாளில் பாலசந்திரன் தங்கத்தை அழைத்துச்சென்று விடுவான் என்கதி நிர்க்கதிதான்! அப்போதுதான் என் கொலைகார நெஞ்சு அவ்விதம் செய்யத் துணிவு கொண்டது. அப்பா! அன்று விதைத்த

வினே தானப்பா! இன்று தங்கத்தின் இன்பத்தைச் சூரையாடி விட்டது. என்ன செய்தேன் தெரியுமா? "புயல்காற்றில் வீடிடிந்து சுவர்சரிந்து விழுந்ததன் பலனக தங்கத்திற்கு அடிபட்டு மரணமடைந்தாள்" என்ற பொய் சேதியை இக்கையாலேயே எழுதி பாலசந்திரனுக்கு அனுப்பிவிட்டேன். அதுமட்டுமா? 'காரியமெல்லாம் முடிந்துவிட்டதென்றும்" எழுதினேன். நான் எழுதினல் அதை நம்பித்தானே ஆகவேண்டும் என்ற கொடூர நம்பிக்கையில் இருந்தேன் அப்போது. அதன் விளைவு இப்படி யாகும் என்று என் நெஞ்சு நினேக்கவில்லையப்பா! அந்த அதிர்ச்சியைத் தாங்காது பாலசந்திரனின் மூளே கலங்கிவிட்டது. ஏதோ வெகு அபூர்வமாக தோடிராகம் ஆலாபனே செய்து கொண்டிருந்தானும். செய்திபோயிற்ரும். அவ்வளவுதான், பிரக்ஞையற்று தரையில் 'மடேர்' என்று சாய்தானும். அன்றுமுதல் அவன் சித்தம் சிதறி விட்டது. ஐயோ! அந்த பரிதாபத்தைக் கண்டால் பார்க்க சகிக்கவில்லே. எப்படியோ அவனே இங்கு கொண்டு சேர்த்து விட்டார்கள். அவனுல் 'தங்கத்தை' புரிந்து கொள்ளவே முடியவில்லே. ஏதோ தொடர்பில்லாத பேச்சுக்களே அவன்வாய் உதிர்கின்றது. அதில் அர்த்தமே யில்லே. எப்போது பார்த்தாலும் தலேயைப்பிய்த்துக்கொள்வதும், தூணில் மோதிக்கொள்வதுமாய் இருக்கிறுன். அதைப் பார்த்தால் என் கண்ணில் ரத்தமே வந்து விடுகிறது. நெஞ்சு விம்மிவிம்மித் தணிகிறது. என் செல்வக்கிளி 'தங்கத்தின்' இன்ப வாழ்வு வேரை அறுத்து விட்டேன். பாவி! அவள் எப்போதும் கண்ணீரும், கம்பலேயுமாய்தானிருக்கிருள். இந்த கோரத்தைப்பார்க்காமல் என் கண்மூடகாலம் வரவில்லே!! துடியாய் துடித்துக் கொண்டிருக்கிறேன் போதுமாப்பா?" என்று ஒட்டிய கன்னங்களிலே கண்ணீர் தோய்ந்து கொண்டிருக்க முடித்தார். என் இதயத்தினின்று பெருமூச்சொன்று வெளி வந்தது. அக்கிழவரிடம் எனக்கு சற்றுகூடபச்சாதபமே ஏற்படவில்லே. "படுபாவி! அவ்விருவரது வாழ்வை முறித்து விட்டானே" என்று சபித்துக்கொண்டே மறுகணத்தில் அவர் பார்வையிலிருந்து விலகினேன்.

குழந்தைகள்

"பாசரசு"

குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டுமென்பதைப் பற்றி எவ்வளவோ பேர்கள் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இதற்காகவேண்டி எவ்வளவோ பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். சரசுவதியை இந்தப் பள்ளிக் கூடங்களில் சேர்ந்து கற்றுக் கொள்ளச் சொல்லவில்லை. அல்லது குழைந்தைகள் சைகாலஜியைப் பற்றி ஆயிரக்கணக்கான பக்கங்களில் எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களைப் படிக்கவும் சொல்லவில்லை. இவைகளெல்லாம் அவசியமே இல்லை. குழைந்தைகளுக்கு அளவுமீறிய செல்லம் கொடுக்காதே என்றுதான் சரசுவதியை நான் அடிக்கடி வேண்டிக் கொண்டிருக்கின்றேன். ஆனல், அவள் குழந்தைகளைத் தெய்வமாகப் பாவித்து அவைகளைக் குட்டிச்சுவராக ஆக்கியிருக்கிறாள். குழந்தைகள் தெய்வங்களல்ல, யமதூதர்கள்.

உலகத்தில் மனிதன் செய்யும் முதல் குற்றம் கலியாணம் செய்து கொள்வது. இரண்டாவது தகப்பன் என்ற பெயரை எடுப்பது.

நான் ஏதாவது கதை ஒன்று எழுதிக் கொண்டிருப்பேன். கதையை எப்படிக் கொண்டுபோய் முடிப்பது என்பது சரியாகப் புரியாமல் வெகு நேரமாக மூளையுடன் போராடிக் கொண்டிருப்பேன். திடீரென்று மூளையில் என் கதைக்கு அழகான முடிவு ஒன்று உதிக்கும். அப்பொழுது கதையை வேகமாக எழுதிக் கொண்டுபோய் முடிக்கத் தோன்றும். அந்த சமயமாகப் பார்த்து கடைசிக் குட்டி (குட்டியல்ல—யமதூதன்) வந்து விடுவான்.

"அப்பா, நானு பேனு, குடுப்பா, அப்பா, நானு பேனு," என்று அவன் ஓயாமல் எச்சரிக்க வாரம்பித்து விடுவான்.

அவன் அப்படி கத்திக்கொண் டிருக்கும்பொழுது கதைமேல் எனக்கு மனம் ஓடாது.

"போடா, நான் எழுதுகிறேன், அம்மாகிட்ட போய் கேள்," என்று சொன்னால் அந்த வாண்டுப் பயல் அம்மா விடம் போய்த் தொந்திரவு செய்ய மாட்டான்.

"அப்பா, அப்பா, பேனு நானு அப்பா," என்று மூச்சு விடாமல் கேட்டுக்கொண்ட யிருப்பான்.

எனக்கு கோபம் வந்துவிடும். "போடா, அம்மா வைப் போய்க் கேளுடா," என்று கொஞ்சம் கோபமாகச் சொல்ல வேண்டியதுதான் தாமதம், மூண்றரை கட்டை சுருதியில் அடித்துப்போட்டு விட்டதுபோல் கத்தி அழு வான்.

உடனே சமைய லறையிலிருந்து ஒரு கூச்சல் கிளம் பும்.

"என் அப்படி குழந்தையைப் போட்டுக் கொல்லு கிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே வருவாள் சரசுவதி.

"என்ன இருந்தாலும் கைமட்டும் கொஞ்சம் அதிகம் தான். குழந்தையைப் போட்டு என் அடிக்க வேண் டும்......" என்று சொல்லிக்கொண்டே போவாள்.

"நான் அடிக்கவில்லை......!" என்று நான் விஷயத் தைச் சொல்லுமுன்......

"ஆமாம்; உங்களுக்கு என்மேல் இருக்கிற கோபத்தை யெல்லாம் வைத்துக்கொண்டு அவன்மேல்...."

"இல்லையடி......"

"குழந்தை எப்படி வீறிட்டது?"

"நான் அடிக்க வில்..."

" குழந்தை எப்படி துடித்துவிட்டது! குழந்தைக்குத் தகப்பனுர் என்பதை இப்படித்தான் காட்டவேண்டுமா? ......" என்று இறைந்து கொண்டு போவாளே தவிர நான் சொல்லுவதைக் காதில் வாங்கிக் கொள்ளமாட்டாள். "ஏண்டா கண்ணு, அப்பா எதுக்கடா அடிச்சார்?" என்று கேட்பாள். குழந்தையை அடித்த காரணத்தை என்னிட மிருந்து தெரிந்து கொள்ளமாட்டாள். அந்த வாண்டுப் பயலைத்தான் கேட்பாள். அவன்தான் உண்மையைச் சொல்லுவான் என்பது அவள் எண்ணம்.

அந்த வாண்டுப் பயல் தேம்பிக்கொண்டே, " நானு பேனு," என்பான். அவ்வளவுதான், சரசுவதி என் கையிலிருக்கும் பேனுவைப் பிடுங்கி அவன் கையில் கொடுத்து விட்டு, குழந்தையுடன் சமையலறைக்குப் போய் விடுவாள். அப்படிப் போகும் பொழுது அந்தப் பயல் திரும்பி ஏளனமாக என்னை ஒருமுறை பார்ப்பான். யுத்தத்தில் தான் அடைந்த வெற்றியை ஒரு இறுமாப்பு பாவனையாக அவன் முகத்தில் காட்டுவான். நான் அன்று கதை எழுதி முடித்தாற் போல் தான்.

ஒரு நாள் மாலை நான் வீட்டிற்கு திரும்பிய பொழுது என் மேஜை மீதிருந்த பின் குஷன், இங்கி ஸ்டாண்ட், பேப்பர் வெயிட், டெஸ்க் டைரி, எதையுங் காணும்.

" ஹேய் சச்சோ, இங்கே வா," என்று கூப்பிட்டேன். சரசுவதி பிரசன்னமானுள்.

" மேஜை மீதிருந்தவைகளெல்லாம் எங்கே?" என்று கேட்டேன்.

" என்னைக் கேட்டால்?"

" எங்கே போய் விட்டிருக்கும்?"

" இதோ பாருங்கோ, ரொம்ப அவசரப்பட்டுப் பேச வேண்டாம். நான் எத்தனை நாள் உங்களுக்குச் சொன்னேன். உங்கள் ஆபீஸை தெருப் பக்கமுள்ள அறையில் வைக்க வேண்டாமென்று. அதோடு கதவைத் திறந்து போட வேண்டாமென்றுல் கேட்கிறதில்லை. எவன் அவைகளை யெல்லாம் திருடிக் கொண்டு போனுனே?"

"சட், இவைகளை யெல்லாம் எவனும் திருட மாட்டான்."

"சரி, நான் சொன்னால் நீங்கள் நம்பப் போகிற தில்லை. எவனும் திருடிக் கொண்டு போகவில்லையானால் அவைகளுக்குச் சிறகு முளைத்துதான் பறந்து போயிருக்க வேண்டும்."

அவளுடன் மேலும் பேசிக் கொண்டிருப்பதால் ஒரு வித பிரயோஜனமும் உண்டாகப் போவதில்லை யென்பதை அறிந்து மூலை முடுக்குகளெல்லாம் தேட வாரம்பித்தேன். கடைசியாக குழந்தைகள் விளையாட்டு சாமான்களை வைத்திருக்கும் மரப் பெட்டியில் என் மேஜை மீதிருந்து காணமல் போன அவ்வளவு சாமான்களுமிருந்தன.

"ஹேய், சரசு, இதோ பார்த்தாயா? எல்லாம் உன்னுடைய அழகான குழந்தைகள் விளையாடுவதற்கு இவைகளை யெல்லாம் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள்! இவைகளை யெல்லாம் எடுக்கக் கூடாதென்று நீ கண்டிக்கக் கூடாதா?"

"ஆமாம், ஆயிரம் ஆயிரமாகக் கொட்டி வாங்கி வந்தீர்களாக்கும்: குழந்தைகளுக்கு அந்த அருமை தெரியவில்லை...ம்ம்..." என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

குழந்தைகளின் தொந்திரவு பொறுக்க முடியாமல் அவர்களைப் பள்ளிக்கூடம் அனுப்ப வாரம்பித்தேன். இந்த முறை பின்னும் அதிகமான சங்கடத்தைதான் கொடுத்தது. குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு கொண்டு போய் விட்டு வருவதில் நேரம் வீணகப் போகும். பள்ளிக் கூடத்தில் விட்டு வந்த கொஞ்ச நேரத்திற் கெல்லாம் இரண்டாவது குட்டி வீட்டுக்கு ஓடி வந்து விடுவான். வீட்டுக்கு வந்த அரை மணி நேரத்திற்குள் திரும்பவும் பள்ளிக்கூடம் போக வேண்டு மென்பான். அதற்கு நான்தான் துணை போக வேண்டும். இந்த வாண்டுப் பயலுக்கு பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு ஓடி வரும் பொழுது துணை வேண்டியதில்லை. ஆனல் திரும்பவும்

பள்ளிக்கூடம் போகும் பொழுதுதான் மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கும் நான் கூட போக வேண்டும். ஒரு நாளைக்கு குறைந்தது பதினைந்து தடவை பள்ளிக்கூடத்திற்கு நடக்க வேண்டுமென்றால் முடிகிறதா ? பள்ளிக்கூடம் போக வேண்டாமென்று சொன்னால் கேட்பதில்லை. ஒரே அழுகை மயம் தான். எதற்காக இந்தக் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தோம் என்றாகிவிட்டது.

இந்த குழந்தைகள் செய்யும் அட்டகாசத்தையும், என் மனைவி அவர்களுக்குக் கொடுக்கும் செல்லத்தையும் கண்டு அழுவதா சிரிப்பதா என்பது எனக்கே விளங்கவில்லை.

பொங்கலுக்கு புது நாடகம்!
13—1—46 ஞாயிறு முதல் தினசரி
வைரம் அருணாசலம் செட்டியாரின்
ஸ்ரீ ராம பால கான விநோத சபாவின்
★ தாக சாந்தி ★
(சர். பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில்)
அபூர்வ காட்சிகளும், அழகான தமாஷ்களும் நிறைந்த தமிழ் நாடகம்
பண்டாரத் தலைவரின் லீலா மண்டப நடனங்கள் ஒரு ஸ்பெஷாலிட்டி!
மவுண்டு ரோடு நியூ தியேட்டரில்
வியாழன், சனி இரவு 9 மணிக்கு
இதர நாட்களில் மாலை 6 மணிக்கு

Printed at Commercial Printing & Publishing House, G. T., Madras P. I. Card Q. H. No. 120. For M/S Basaras Karyalayam P. I. Card Q H. No. MS 409.

வசுந்தராதேவி..ஜி.என்.பி
M.S.சரோஜா...காளி.N.ரத்னம்
சாரங்கபாணி நடித்த....
டைரக்ஷன்
T.R.ரகுநாத்
ஸ்டுடியோ
நியுடோன்..
உமா பிக்சர்ஸ்
உதயணன்
வாசவதத்தா
நரஸூ ரிலீஸ்
SEENU

தென்னாட்டின்
உத்திரவாதமுள்ள
நகை வியாபாரிகள்
ி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்.
ந்தி : ராஜா.
தபால் பெட்டி : 139.
போன்: 218 A.